581

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

## மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௧௦.] பரீதாபி ௵ புரட்டாசிமீ [பகுதி-௧௧.

உள்ளுறை.

ஐயவினாவின் விடையுரை:—பத்திராதிபர். ௪௬௧

ஔவையாரது நீதிநூல்கள்:— ஸ்ரீமத்-டி. எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரிகள் ௪௭௬

திருவள்ளுவரும் சமரச சன்மார்க்கமும்:— ,, மு. வேங்கடசாமிநாட்டார். ௪௮௪

புட்பபந்தம்:— ,, ப. அ. கிருஷ்ணஸ்வாமிப்பிள்ளை. ௪௯௩

திருமந்திர நூறுபாட்டுக்குரை:— ஸ்ரீமத்-சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர். ௫௩

மாறனலங்காரம்:—பத்திராதிபர். ௪௯

புத்தகவரவு:—பத்திராதிபர்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வரவுசெலவு கணக்குமுதலியன:—

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] 1912. [தனிப்பிரதி அணா-8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

582

உ

# விளம்பரம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும் வெளியாகும் "செந்தமிழில்" பிரசுரமாகவேண்டிக் கருதியனுப்புகிற வித்தியா விஷயமானதும், சாஸ்திரவுணர்ச்சியுள்ளதுமான விஷயப்பிரவசனங்களையும், பத்திரிகைக்கனுப்புஞ் சமாசாரங்களையும், ஆராய்ந்தபிப்பிராயமெழுத அனுப்புகிற புஸ்தகங்களையும், நூதனபுஸ்தக ஆராய்ச்சி விஷய சமாசாரங்களையும், "செந்தமிழ்"ப்பத்திரிகை விஷயமாய் ஏற்படக்கூடிய சகலவித லெட்டர்களையும், மணியார்டர் வகையறுக்களையும், ஷை தமிழ்ச் சங்கம் அச்சாபீஸில் செய்யவேண்டிய வேலைகளையும், தமிழ்ச்சங்கத்தோடு சேர்ந்திருக்கிற சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை விஷயமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய ஸகல தகவல்களையும் பற்றி எழுதிக்கொள்ளவேண்டியவர்கள் ஷை தமிழ்ச் சங்கம் மானேஜருக்கு எழுதவேண்டியது.

(2) மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பைண்டு ஆகாததாக ஏராளமான சங்கப்பதிப்புப் புஸ்தகங்கள் விற்பனையாகவேண்டியவைகளாக விருப்பதால், ஒரே தடவையில் 50-க்கு மேற்பட்ட பிரதிகள் வாங்க விருப்பமுள்ளவர்களுக்கு இதன் மூலமாகத் தெரிவிக்கிறதென்னவென்றால், அதிகமான பிரதிகள் வாங்குவோர்களுக்கு ஷை தமிழ்ச் சங்கம் பிரஸிடெண்டு அவர்கள் ஒவ்வொரு ஆர்டருக்குத் தக்கவாறு 100-க்கு 40-ரூபாய் வரை கமிஷன் கழித்துக்கொண்டு ரொக்கமாக விலைகொடுத்து வாங்கிக்கொள்ளலாமென்று உத்தரவு செய்திருக்கிறபடியால், தேவையுள்ளவர்கள் உடனே மதுரைத் தமிழ்ச் சங்கம் ஆபீஸ் மானேஜருக்கு மனுச் செய்துகொள்ளவும்.

குறிப்பு:—சங்கத்தின் மெம்பர்கள், சந்தாதார்கள் சங்கம் ஆபீசுக்கு எழுதும் கடிதம் வகையராக்களில் தங்கள் பேருக்கு வரும் "செந்தமிழ்" பத்திரிகை விலாசத்தில்கண்டிருக்கிற நிம்பரைக் குறிப்பிட்டு எழுதவும்.

R. Rangaswami Aiyer,

*Ag. Manager.*

583

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-கO.] பரீதாபி ௵ புரட்டாசி௴ [பகுதி-கக.

## ஐயவினாவின் விடையுரை.

(சசசச-ம் பக்கத்தொடர்ச்சி.)

6-வது வினா:—திருக்குறளிற் பாயிர மென்றுதொடங்கிக் கடவுள்வாழ்த்து வான்சிறப்பு நீத்தார்பெருமை அறன்வலியுறுத்த லென்னும் நான்கதிகாரங்களையும் முடித்து, முடிவிற் பாயிரமுற்று மென்றெழுதப்பட்டிருக்கிறது. இதற்குச் சான்றாக. "வீடொன்று பாயிரநான்கு....................வள்ளுவர்சொன்னவகை." எனவும், "பாயிரநான்கில்லறமிருபான்....................வள்ளுவனார்தோந்து." எனவும் 'திருவள்ளுவமாலை'யிற் கூறியிருத்தலால் அந் நான்கதிகாரங்களையும் பாயிரமெனவழங்குகின்றோமே; அப்பாயிரம் பொது, சிறப்பென்னும் இருவகையினு ளெதன்பாற்படும்? அதற் கிலக்கண மென்ன? அவ் விலக்கணம் நான்கதிகாரத்துள்ளும் பொருந்துமா றெங்ஙனம்? என்பனவாம்.

இவற்றிற்குப் பாயிரத்தினிலக்கணங்கண்டு அவற்றுட் பொருந்துவது கொண்டு விடைகூறவேண்டும்.

பாயிரத்தினிலக்கண மின்னவெனத் தொல்காப்பியத்துட் சொல்லப்பட்டில வாயினும் தொல்காப்பியத்தின் உரையாசிரியர்களாற் காட்டப்பட்ட மேற்கோள்களாலும் களவியலுரை மேற்கோள்களாலும், நன்னூல் இலக்கணவிளக்கமுதலிய நூல்களாலும் விரித்துச் சொல்லப்பட்டுள்ளன. அவற்றுளொன்றாயினு மிங்கெடுத்துக்கொண்ட

*

கடவுள்வாழ்த்து முதலியவற்றிற்குப் பொருத்தமுள்ளதாகக் காணப் படவில்லை.

இராமாயணம், பெரியபுராணம், திருவிளையாடல் முதலிய நூல் களிலும் கடவுள்வாழ்த்து முதலியன, பாயிரமென வழங்கப்படு கின்றன. சிந்தாமணியிற் சித்தசரணம், அருகசரணம், சாதுசரணம், தன்மசரணமெனப் பலதிறப்படும் வாழ்த்துக்கூறி அதன்பின்பு அவை யடக்கமும், அதன்பின்பு பதிகமுங் கூறப்பட்டுள்ளன. "பதிகமென் பதுபல்வகைப்பொருளைத், தொகுதியாகச்சொல்லுதருமே" என்னு மிலக்கணப்படி, நூலுள் விரித்துக்கூறும் பலவகைப் பொருளையும் நூன்முகத்துத் தொகுத்துக்கூறுவது பதிகமென வழங்கப்படுவ தாகக் காணப்படுவதுமன்றி, பதிகமென்பது பாயிரத்தின் பரியாயப் பெயராகவும் வழங்கப்படுகிறது இதனை, "முகவுரைபதிகமணிந்துரை ...............பாயிர"மென்பதனுலுணர்க. பதிகமென்பது பாயிரத் தின் பரியாயப்பெயராகவே, நூலிற்சொல்லும்பொருளைத் தொகுத் துரைப்பதும் பாயிரமென வழங்கத்தகுமென்பது பெறப்பட்டது. பதிகம், நூன்முகத்துரைக்கப்படுவதுபற்றிப் பாயிரமாவதுபோல வாழ்த்துமுதலியனவும் நூன்முகத் துரைக்கப்படுதல்பற்றிப் பாயிர மென வழங்கப்படுவனவாய்க் காணப்பெறுகின்றன. இங்ஙனம் வழங் கத்தகு மென்பதற்கு யாப்பருங்கலவிருத்தியுரை காரரால், "வணக்க மதிகாரமென்றிரண்டுஞ்சொல்லச், சிறப்பென்னும்பாயிரமாம்." என மேற்கோள் காட்டப்பட்டிருக்கிறது. ஈண்டு அதிகாரமென்பது அதி கரிக்கப்படும் பொருள். அதனைச் செயப்படுபொருளெனவும், கருதிய பொருளெனவும், நூனுதலியபொருளெனவும் வழங்குவர். இம் மேற்கோளாற் கடவுள்வாழ்த்தும், பதிகமும் ஒருவகைச் சிறப்புப் பாயிரமென்பது பெறப்பட்டது.

இவ்வாறே யாப்பருங்கலக்காரிகை யுரைகாரர் முதலியோராலும், "தெய்வவணக்கமுஞ்செயப்படுபொருளு, மெய்தவுரைப்பது தற்சிறப் பாகும்." என்று மேற்கோள் காட்டப்பட்டமையால் இது பின்னும் வலியுறுத்தப்பெற்றுத் தற்சிறப்புப்பாயிரமென வழங்கப்படுவதாக வுங் காணப்படுகிறது. இவ்வாற்றாற், பிறராற் செய்யப்படும் பதினொரு சிறப்பின்வேறாய் நூல்செய்வோன்றன்னாற் செய்யப்படும் கடவுள் வணக்க முதலியன தற்சிறப்புப்பாயிரமாமென்பது பெறப்பட்டது.

இன்னும் மாறனலங்காரவுரைகாரர் "தெய்வவணக்கமுஞ்செயப் படுபொருளு, மெய்தவுரைப்பதுந்தற்சிறப்பாகும்" என முன்னையோர் கூறியமுறையானும் "கடவுள்வணக்கமுங்கருதியபொருளுந் திடனு றப்புகல்வதுஞ்சிறப்பென்ருகும்." என இந் நூலுடையாருங்கூறிய முறையானுமுணர்க.'உம்மையிறந்ததுதழீஇயிற்று.'எனக்கூறினமை யால் நூற்கு ஆக்கியோன் பெயர்முதலியன கூறுதலேயன்றிக், கட வுள்வணக்கமுதலியன கூறுவதுஞ்சிறப்புப்பாயிரமாமென்பது பெறப் படுகிறது. "தெய்வவணக்கமுஞ்செயப்படுபொருளு, மெய்தவுரைப்ப துந்தற்சிறப்பாகும்." என்பதன்கண் விரித்துரைத்த வெச்சவும்மை யாற் றெய்வவணக்கமொன்றே யுரைப்பினும், செயப்படுபொரு ளொன்றேயுரைப்பினும், இவற்ருேடவையடக்கமுஞ் சேர்த்துரைப் பினும் தற்சிறப்புப்பாயிரமாமென்பது பெறப்படும்.

இப்பொருள் "வணக்கமதிகாரமென்றிரண்டுஞ்சொல்லச், சிறப் பென்னும்பாயிரமாம்" என யாப்பருங்கலவிருத்தியுரைகாரர் காட் டிய மேற்கோளாலுங் கொள்ளக்கிடக்கின்றது. எங்ஙனமெனில்? 'முற்றும்மையொரோவழியெச்சமுமாகும்' என்பதுபற்றி, இரண்டு மென்னும் முற்றும்மை யெச்சப்பொருளு முணர்த்துமென்னுமொரு சாரார் கொள்கைகொண்டு வணக்கமாத்திரமுரைப்பினும் அதிகார மாத்திரமுரைப்பினும் சிறப்புப்பாயிரமெனப்படும் எனப் பொரு ளுரைத்தற்கிடனுமாறு காண்க.

இனி இங்ஙனமன்றி, இரண்டென்னுந் தொகைகொடுத்தமை யால் வணக்கம் அதிகாரம் என்னுமிவற்றுள் ஒவ்வொன்றும் பாயிர மாமெனப் பொருள்படுமென்பதனைப் பதார்த்தங்கள் ஏழென்றதற் குத் தருக்கசங்கிரகதீபிகையுரையாசிரியர் உரைகூறியவாற்ருனுணர்க. வணக்கமெனப் பொதுப்படக்கூறியவதனுற் கடவுள்வாழ்த்து முதல் அவையடக்கமீருகக் கூறும் வணக்கவகையெல்லாங் கொள்ளப்படும்.

இதுகாறுங் கூறியவாற்ருல் வணக்கமாத்திரமுரைப்பதும் அதி காரமாத்திர முரைப்பதும் அவ்விரண்டு மொருங்குரைப்பதும் தற் சிறப்புப்பாயிரமாமென்பது பெறப்பட்டது.

இவற்றுள் வணக்கமாத்திரமுடையன திருப்பல்லாண்டு முதலியன. அதிகாரமாத்திரமுடையன மணிமேகலை முதலியன. அவ்விரண்டு மொருங்குடையன சிந்தாமணிமுதலியன.

இனித் திருக்குறட்பாயிரமாகிய நான்கதிகாரங்களுள் ஒவ்வொன்றிலும் சொல்லப்படும் பொருளைக்கொண்டு தற்சிறப்புப்பாயிரத்துக்குரிய விருவகைப் பொருள்களுள் இஃதிதன்பாற்படுமெனக் கண்டுரைக்கவேண்டும்.

திருக்குறட்பாயிரத்துள் முதலாவது அதிகாரம் கடவுள் வாழ்த்து. அதற்குப் பரிமேலழகரெழுதிய அதிகார விவரணத்தாலும், பொருளாலும் அது நூலுக் கேற்புடைக்கடவுளைவாழ்த்துதல் என விளங்குதலால் வணக்கத்தின்பாற்பட்ட தற்சிறப்புப்பாயிரமெனக் கொள்ளத்தகும்.

இனி வான்சிறப்பு முதலிய அதிகாரங்களைப்பற்றி யாராய்வாம். வானும் நீத்தாரும் நூலால் நுவலப்படும் அறமுதற்பொருளன்மையால், வணக்கம் அதிகாரம் என்னும் தற்சிறப்புப்பாயிரவகை யிரண்டனுள் அதிகாரமென்னும் நூனுதலிய பொருளெனப்படா. பாயிரத்துட் கூறப்பட்டமையால் எஞ்சிய வணக்கத்திற்கே உரியவாதல் வேண்டுமென்பது பாரிசேடிகமென்னும் அருத்தாபத்தியாற் பெறப்படும்.

வணக்கமென்பது ஈண்டு உபலக்ஷணத்தால் வாழ்த்துவணக்கம் வருபொருளுரைத்த லென்னும் மூவகை வழிபாட்டினையும் குறித்து நிற்பதாம். கடவுள்வாழ்த்து என்பதனுள் வாழ்த்து என்பதும் அன்னதே. ஆதலால் வாழ்த்து வணக்கம் என்பன ஈண்டு ஒருபொருட் சொற்களாகவே கொள்ளப்படும்.

இனி வாழ்த்துக்கூறுமிடத்து "வாழ்த்தியல்வகையேநாற்பாற்கு முரித்தே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரவுரையில், "வாழ்த்தியலென்னுது வகையென்றவதனான் மேற்கூறிய மும்முதற்பொருளின் அறுவகையும் பெரும்பான்மையெனப்படும் என்பதூஉம், அங்ஙம் வாழ்த்துங்கால்..................முன்னிலையாக வாழ்த்துதலும் படர்க்

கையாக வாழ்த்துதலுமென இருவகைப்படுமென்பதூஉ மெல்லாங் கொள்க. அங்ஙனம் வாழ்த்தப்படும் பொருளாவன:—கடவுளும் முனிவரும் பசுவும் பார்ப்பாரும் அரைசரும் மழையும் நாடுமென்பன." எனக்கூறப்பட்டுள்ளன.

இங்ஙனம் கடவுளோடு முனிவரும் மழையும் வாழ்த்தப்படும் பொருளுட் சேர்த்தெண்ணப்பட்டமையானும், எடுத்துக்கொண்ட அறமுதலிய மும்முதற் பொருளுக்கு ஏற்புடையவாதலானும் கடவுள் வாழ்த்தோடொப்ப மழையின் வாழ்த்தாகிய வான்சிறப்பும், முனிவர் வாழ்த்தாகிய நீத்தார்பெருமையும் வணக்கத்தின்பாற்பட்டமையாற் றற்சிறப்புப்பாயிரமாயின.

வானும் நீத்தாரும் நூனுதலிய வறமுதற்பொருளுக் கேற்புடையவாதல் வான்சிறப்பு, நீத்தார்பெருமையென்னும் அதிகாரங்களுக்குப் பரிமேலழகரெழுதிய விவரணவுரையால் விளங்கும். இவ்விரண்டதிகாரத்துள்ளுங் கூறப்பட்ட வாழ்த்து வருபொருளுரைத்தலென்னும் வாழ்த்துவகையாம். இதனை வடநூலார் வஸ்துநிர்த்தேசமென்பர்.

பாயிரவகையுளொன்றாகிய வணக்கத்தை, "தெய்வ வணக்கமுஞ் செயப்படுபொருளு, மெய்தவுரைப்பது தற்சிறப்பாகு" மெனவும், "கடவுள்வணக்கமுங்கருதியபொருளுந், திடனுறப்புகல்வதுஞ்சிறப்பென்றாகும்." எனவும் ஏனை வணக்கத்தின் வேறுபாடுதோன்றத் தெய்வவணக்கம், கடவுள்வணக்கமென விதந்தோதினார்க்கு வான் சிறப்பும், நீத்தார்பெருமையும் எங்ஙனம் அவ்வணக்கத்தின் பாற்படுமெனின், "தெய்வந்தொழாள்கொழுநற்றொழுதெழுவாள், பெய் யெனப்பெய்யுமழை" என்னுங்குறளிற் கற்புடையாட்குத் தெய்வம் ஏவல்செய்யு மென்னுங்கருத்தாற் பெய்யெனப்பெய்யுமழை யெனக் கூறினமையால் மழை தெய்வத்தின் வேறன்றென்றனரென்பது பெறப்படும்.

அறமுதற்பொருள்களை யுள்ளவாறுபதேசிக்கு முனிவர்கள் குரவராதலாற் குரவரைக்கடவுளாகக் கருதிவழிபடல் எல்லோர்க்கு

மொப்பமுடிந்தமையா லவரும் கடவுளின் வேறல்லரென்க. "ஆசிரியர் கடவுளாகக்கடவர்" என்பதும் வேதமுடிபேயாம்.

இன்னும் தொல்காப்பியப் பொருளதிகாரத்துள் "அமரர்கண் முடியுமறுவகையானு"மென்னுஞ் சூத்திரவுரையுள், வாழ்த்துக்குரிய அறுவகை கூறுமிடத்து "அவை முனிவரும், பார்ப்பாரும், ஆனிரையும், மழையும், முடியுடைவேந்தரும், உலகுமாம். இவை தத்தஞ் சிறப்புவகையால் அமரர்சாதிப்பாலவென்றல் வேதமுடிவு" எனக் கூறி, அவ் வாழ்த்துக்கு உதாரணங்காட்டுமிடத்து "நிறைமொழிமாந்தர்பெருமைநிலத்து, மறைமொழிகாட்டிவிடும்," "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச்சார்பாய்மற்றாங்கே, யெடுப்பதூஉமெல்லாமழை." என்னுமிவ் வதிகாரங்களிலுள்ள குறள்களையே முறையே முனிவர் வாழ்த்துக்கும் மழையின்வாழ்த்துக்கு முதாரணமாகக் காட்டியிருப்பது மிங்குநோக்கத்தக்கதாம்.

ஆகவே முதன் மூன்றதிகாரங்களும் முறையே கடவுள்வாழ்த்தும், மழையின்வாழ்த்தும், முனிவர்வாழ்த்துமாகிய வணக்கத்தின் பாற்படுதலால் வணக்கமென்னும் சிறப்புப்பாயிரமா மெனக்கொள்க.

இனி, நான்காமதிகாரமாகிய அறன்வலியுறுத்தலை யாராயுமிடத்து அதற்குப் பரிமேலழகரெழுதிய அதிகார விவரணங்கொண்டு தெளியத்தகும். அவ் வதிகார விவரணம் வருமாறு:—

"அஃதாவது அம் முனிவரானுணர்த்தப்பட்ட அம் மூன்றனுள் ஏனைப்பொருளு மின்பமும்போலாது அறன், இம்மை மறுமை வீடென்னும் மூன்றனையும் பயத்தலால் அவற்றின் வலியுடைத்தென்பதுகூறுதல்; அதிகாரமுறைமையு மிதனானே விளங்கும். "சிறப்புடைமரபிற்பொருளுமின்பமும், அறத்துவழிப்படூஉந்தோற்றம்போல" என்றார் பிறரும்" என்பதாம்.

இதனால் நூலால் நுவலப்படும் அறம் பொருள் இன்பங்களுட் சிறப்புப்பற்றி அறத்தின்றிறம் தொகுத்துக்கூறப்பட்டதாகக் காணப்படுகிறது. ஆதலாற் செயப்படுபொருள் கூறியதாகக்கொள்ளுதல் பொருந்தும்.

589



அங்ஙனமாயின் "வடுவிலாவையத்துமன்னியமூன்றி, னடுவணதெய்தவிருதலையுமெய்தும்," "ஒண்பொருள்காழ்ப்பவியற்றியார்க்கெண்பொரு, ளேனையிரண்டுமொருங்கு" என்பவற்றால் அறத்துக்கும், இன்பத்துக்கும் பொருள் காரணமாகக் காணப்படுதலாற் பொருள் அறத்திற் சிறந்ததன்றென லெங்ஙனம் பொருந்துமெனின்? "அறனீனுமின்பமுமீனுந்திறனறிந்து, தீதின்றிவந்தபொருள்." என்றமையாற் றிறனறிந்துதீதில்லையாகப் பொருள்கோடல் அறமாதலால் அறச்சார்புபெற்ற பொருளே அறத்துக்கும் இன்பத்துக்கும் காரணமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இக் கருத்துக்கொண்டே "ஒண்பொருள்காழ்ப்பவியற்றியார்க்கெண்பொரு, ளேனையிரண்டுமொருங்கு" என்னுங் குறளில் ஒண்பொருளெனப் பொருளை விசேடித்திருப்பதும். "வடுவிலாவையத்துமன்னியமூன்றி, னடுவணதெய்தவிருதலையுமெய்தும்" என்பதன்கண்ணும் பொருளை முன்னையதென்னாது நடுவணதென அறச்சார்புடைமையகப்படக் கூறியிருப்பதும் கண்டுகொள்க. பிறிதொன்றன்சார்புபற்றி ஏனையவற்றிற்குக் காரணமாகும் பொருள்போலாது தனித்துநின்றும் பிறவற்றிற்குங் காரணமாகும் பெற்றிபற்றியும் அறமே சிறந்ததெனக் கொள்க. ஸாபேக்ஷ நிரபேக்ஷங்களுள் நிரபேக்ஷமே சிறந்ததென்னும் வடநூல் வழக்கு மிது.

ஆதலால் "ஒருபொருட்பொதுச்சொல்லுளபொருளொழியச், தெரிபுவேறுகிளத்த"லாக ஒரூருட்பிறர்தெருக்களுள்ளவழியும் சிறப்புப்பற்றிப் பார்ப்பனச்சேரியெனவழங்குவதுபோல ஈண்டுச் செயப்படுபொருளுட் பொருளின்பங்களுமுளவாயினும் சிறப்புப்பற்றி அறத்திறன்றோன்றக்கூறினமையால் அறன்வலியுறுத்தலெனப்பட்டதெனவுணர்க.

இவ் வதிகாரம் சிறப்புப்பற்றி அறத்திற னுணர்த்தியதெனின், சிறப்புப்பற்றிப் பார்ப்பனச்சேரி யென்னுமிடத்துள்ளனவாய பிறர் தெருக்களும் விலக்கப்படாது கொள்ளக்கிடக்குமாறுபோல அவ் வறத்தையடுத்துள்ள பொருளின்பங்களும் விலக்கப்படாது கொள்ளக் கிடக்குமாறெங்ஙனமெனில், "சிறப்பீனுஞ்செல்வமுமீனுமறத்தினூஉங், காக்கமெவனோவுயிர்க்கு" என்னுங் குறளில் ஆற்றலால் அதிகாரப் பொருளுணர்த்தினாராகி, குறிப்பால் அறத்தையடுத்துச் சிறந்

தது செல்வமென்பதுபடக் கூறினமையாற் பொருளும், "அறத்தான் வருவதேயின்பமற்றெல்லாம், புறத்தபுகழுமில" என்னுங் குறளிற் குறிப்பால் அதிகாரப்பொருள் கொள்ளவைத்து, ஆற்றலால் அறச் சார்பு பெற்ற இன்பமே இன்பமென்பது படக்கூறினமையால் இன்ப மும் விலக்கப்படாது கொள்ளக்கிடக்குமாறு கண்டுகொள்க.

இங்ஙனங்கூறியவாற்ருற் கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத் தார் பெருமை என்னு மூன்றதிகாரங்களால் வணக்கமும், அறன்வலி யுறுத்தலென்னுமோரதிகாரத்தால் அதிகாரமென்னுஞ் செயப்படு பொருளுஞ் சொல்லப்பட்டமையால், "வணக்கமதிகாரமென்றிரண்டுஞ் சொல்லச், சிறப்பென்னும்பாயிரமாம்" எனவும், "தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளு, மெய்தவுரைப்பதுதற்சிறப்பாகும்" எனவும், "கடவுள்வணக்கமுங்கருதியபொருளுந், திடனுறப்புகல்வதுஞ்சிறப் பென்ருகும்." எனவும் கூறிய இலக்கணங்களாலமைந்த தற் சிறப் புப்பாயிரமாமெனவுணர்க.

(தொடரும்.)

திரு. நாராயணையங்கார்,

பத்திராதிபர்.

---

உ

# ஔவையாரது நீதிநூல்கள்

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி எனப்படும் நீதிநூல்கள் யாவும் இளமைதொட்டு எவருமறிந்தவையேயாம். இந் நீதிநூல்கள் நான்கினையும் தொன்றுதொட் டின்றுகாறும் ஔவை யாரது நீதிநூல்களென்பர் கற்ருேரும் மற்ருேரும். இந் நான்கினு ளொன்ரும் நல்வழியின் இறுதியின்கண் அடியில்வரும் செய்யுள் உளது.

"தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லு
மொருவா சகமென் றுணர்."

நல்வழி. 40.

இச் செய்யுளில் ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் என்னும் சமயகுரவர்கள் அருளிச்செய்த தேவாரங்களும், மாணிக்கவாசகசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருக்கோவையாரும் திருவாசகமும் மேம்படுத்துரைக்கப்பட்டமையின், மேலே கூறிய ஆத்திசூடி முதலாகவுள்ள நீதிநூல்கள் நான்கும், தேவாரம், திருக்கோவையார், திருவாசகம் என்னும் சமயநூல்களுக்குப் பிற்பட்ட காலத்தனவாகுமென்பதும், நீதிநூல்களியற்றிய ஔவையார் சமயகுரவர் மூவருக்கும் மாணிக்கவாசகசுவாமிகளுக்கும் பிற்பட்ட காலத்தவராவரென்பதும் எளிதிற் றெளியலாகும். சமயகுரவர் மூவருள் ஒருவராகிய ஞானசம்பந்தரின் காலம் கி. பி. 7-வது நூற்றாண்டின் மத்தியகாலமெனச் சந்தேகமறக் கண்டறியப்பட்டிருத்தலின், இவ் வௌவையாரின் காலம் கி. பி. 7-வது நூற்றாண்டின் நடுப்பகுதிக்கும் பல்லாண்டுகள் பிந்தியதேயாகுமெனக் குன்றின்மேல் விளக்குப்போல் எவரும் கண்டறியலாகும்.

மேலும், அடியில் வரும் பல விஷயங்களும் ஈண்டுக்கூறிய காலவளவிற் கொத்திருக்கின்றன. (1) பழைய கதையின்படி கடைச்சங்கக் காலத்தனவாகக் கொள்ளப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக் கென்னும் தொகைநூல்களின் கூட்டத்து, இந் நீதிநூல்களுளொன்றினது பெயரேனும் காட்டப்படாமை. (2) பதினெண்கீழ்க்கணக்கினுளொன்றாம் நான்மணிக்கடிகையிலுள்ள வொரு செய்யுளையே தழுவி மூதுரையில் ஒரு செய்யுள் அமைக்கப்பெற்றிருத்தல். அவ்விரு செய்யுட்களும் அடியில் வருமாறு:—

"கல்லா வொருவற்குத் தன்வாயிற் சொற்கூற்ற
மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காய்கூற்ற

மல்லவை செய்வார்க் கறங்கூற்றங் கூற்றமே
யில்லிருந்து தீங்கொழுகு வாள்."

நான்மணிக்கடிகை. 82.

"கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்ற
மல்லாத மாந்தர்க் கறங்கூற்ற—மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றங் கூற்றமே
யில்லிற் கிசைந்தொழுகாப் பெண்."

மூதுரை. 27.

(3) திருக்குறளுரையாசிரியராகிய பரிமேலழகர் தமது திருக்குறளுரையில் (குறள் 77), மேலே காட்டிய விரண்டு செய்யுளுள் நான்மணிக்கடிகையி லுள்ளதனையே மேற்கோளாக வெடுத்துக் காட்டியிருத்தல். (4) தொல்லுரையாசிரியர்களெனக் கொள்ளப்படுவாருள், கி. பி. 14-வது நூற்றாண்டிற்கும் பல்லாண்டு பிற்பட்டவராகிய நச்சினார்க்கினியரால் மட்டுமே தம்முரைகளில் இந் நீதிநூல்களினின்றும் மேற்கோள்க ளெடுத்தாளப்பட்டிருத்தல். (5) நற்றிணையினும் குறுந்தொகையினும் நெடுந்தொகையினும் புறநானூற்றினும் தொகுக்கப்பட்டுள்ள ஔவை பாடல்களின் வழக்கும் இந் நீதிநூல்களின் வழக்கும் முற்றும் மாறுபட்டிருத்தல். (6) புறம். 235.

"சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட்பெறினே
யாம்பா டத்தான் மகிழ்ந்துண்ணு மன்னே
சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானு நனிபல கலத்தன் மன்னே
யென்பொடு தடிபடு வழியெல்லா
மெமக்கீயு மன்னே."

என்று பாடியவரும், "அறஞ் செய விரும்பு." "அறனை மறவேல்."
"காப்பது விரதம்." "நோன் பென்பதுவே கொன்று தின்னாமை."
"புலையுங் கொலையுங் களவுந் தவிர்.'' என்ற அறவுரைகள் பாடியவரும் ஒருவராக விருத்தல் கூடாமை. (7) இந் நீதிநூல்களிலுள்ள

சிலசில செய்யுட்கள் முன்னோர் வாயிலாய்வந்த மூதுரைகளையே மொழிபெயர்த்தெழுதியனவாக விருத்தல். ஈண்டு இறுதியிற் கூறியதனையும் சிறிது கீழே காட்டுவாம்.

(1) "ப்ரதமவயஸி பீதம் தோயமல்பம் ஸ்மரந்த:
ஶிரஸி நிஹிதபாரா நாரிகேளா நராணாம் ।
ஸலிலமம்ருதகல்பம் தத்யுராஜீவநாந்தம்
நஹி க்ருதமுபகாரம் ஸாதவோ விஸ்மரந்தி ॥"

(இச் சுலோகம் பஞ்சதந்த்ரம், ஹிதோபதேசம், சார்ங்கதரபத்ததி, ஸுபாஷிதரத்நாகரம், ஸுபாஷிதரத்நபாண்டாகாரம், Sanskrit-Chrestomathie by Richard Garb, page 208; இவைகளிலுள்ளது.) இதன் பொருள்:—தென்னைமரங்கள் இளம்பிராயத்தில் தாமுண்ட சொற்பநீரை நினைப்புடையனவாய்த் தாமுள்ளளவும் அமிருதத்திற் கொப்பான இளநீரைத் தலையாற்சுமந்து தருகின்றன. சாதுக்கள் செய்ந்நன்றி மறவார், நிச்சயம்.

"நன்றி யொருவர்க்குச் செய்தக்கா லந்நன்றி
யென்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்."

மூதுரை. 1.

(2) "ஸம்ஹதி: ஶ்ரேயஸீ பும்ஸாம் ஸ்வகுலைரல்பகைரபி ।
துஷேணாபி பரித்யக்தா ந ப்ரரோஹந்தி தண்டுலா: ॥"

ஹிதோபதேசம்.

இதன் பொருள்:—இனத்தார் வலிகுறைந்தவராகவிருப்பினும், அவருடன் கூடி வாழ்தலே மனிதர்க்கு நன்மை பயக்கும். அரிசி உமி நீங்கினும் முளையாது.

"ஸுஸஹாய: ஸமர்தோऽபி கார்யஸித்திம் ந விந்ததி ।
துஷாதபி பரித்யக்தஸ்தண்டுலா: கிம் ப்ரரோஹதி ॥"

இதன் பொருள்:—ஒருவன் ஆற்றலுடையானாயினும் துணைவலி யில்லானாயின் காரியசித்தி யடையான். அரிசி (முளைக்குந்தன்மையற்ற) உமியினின்று நீங்கினும் முளைப்பதுண்டோ?

> "பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
> விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபே
> ராற்ற லுடையார்க்கு மாகா தளவின்றி
> யேற்ற கருமஞ் செயல்."

மூதுரை. 11.

(3) "பரோऽபி ஹிதவாந் பந்துர்பந்துரப்யஹித: பர: |
அஹிதோ தேஹஜோ வ்யாதிர்ஹிதமாரண்யமௌஷதம்" ||

ஹிதோபதேசம், பக்கம் 118. Bombay Edition by M. R. Kale B. A.

இதன் பொருள்:—அந்நியனாயினும் நமது நன்மையைக் கருதுபவன் நமக்குப் பந்துவாவான். பந்துவாயினும் நமது தீமையைக் கருதுபவன் அந்நியனாவான். நம் தேகத்திலுண்டாகும் வியாதி நமக்கு ஆகாதது. ஆரணியத்தில் முளைக்கும் மருந்து நமக்கு அநுகூலமாகவுளது.

> "உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டா
> வுடன்பிறந்தே கொல்லும் வியாதி—யுடன்பிறவா
> மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கு
> மம்மருந்து போல்வாரு முண்டு."

மூதுரை. 20.

> "பரோऽப்யபத்யம் ஹிதக்ருத்யதௌஷதம்
> ஸ்வதேஹஜோऽப்யாமயவத்ஸுதோऽஹித: |
> சிந்த்யாத்ததங்கம் யதுதாத்மனோऽஹிதம்
> சேஷம் ஸுகம் ஜீவதி யத்விவர்ஜநாத்" ||

பாகவதம் 7-ஸ்க, 5-அத், 37-சுலோ.

(4) வித்வத்வஞ்ச ந்ருபத்வஞ்ச நைவ துல்யம் கதாசந |
ஸ்வதேசே பூஜ்யதே ராஜா வித்வாந் ஸர்வத்ர பூஜ்யதே ||

(இச் சுலோகம் ஹிதோபதேசம், பஞ்சதந்த்ரம், ஸுபாஷித ரத்நபாண்டாகாரம், பாண்டாகாரருடைய ஸம்ஸ்கிருத முதற்பாட புஸ்தகம், சாணக்கிய நீதி 10-வது அத்தியாயம் இவைகளிலுள்ளது.)

இதன் பொருள்:—கல்வியும் இறைமையும் ஒருகாலும் ஒப்பாகாது. அரசன் றன்தேசத்தின்மட்டுமே சிறப்படைவான்; கல்வியுடையோன் எவ்விடத்தும் சிறப்படைவான்.

> "மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
> மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
> தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
> சென்றவிட மெல்லாஞ் சிறப்பு."

மூதுரை. 26.

(5) ஸதைவாபி ஸம்ஸேவ்யா: க்ஷீணவித்தாபி ஸஜ்ஜநா:।
ஶுஷ்கோபி ஹி நதீமார்க: கந்யதே ஸலிலார்த்திபி:॥

ப்ரஸங்கரத்நாவளி.

இதன் பொருள்:—நல்லோன் தன் கைப்பொருள் எல்லாம் கரைந்த வறியனாக விருப்பினும் அந் நல்லோனையே நாடி யாசித்தல் தகும். நீர் வற்றி ஆறோடின வழியெல்லாம் வறண்டு கிடப்பினும் தண்ணீரை விரும்பிவருவாரெவரும் அவ்வாறு ஓடிச்சென்றவழியே தோண்டுவார்கள்.

> "ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
> றூற்றுப் பெருக்கா லுலகூட்டு—மேற்றவர்க்கு
> நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராணு
> மில்லையென மாட்டா ரிசைந்து."

நல்வழி. 9.

(6) அராவப்யுசிதம் கார்யமாதித்யம் க்ருஹமாகதே।
சேத்து: பார்ஶ்வகதாம் சாயாம் நோபஸம்ஹரதி த்ரும:॥

மகாபாரதம், சாந்திபர்வம், 146-வது அத்தியாயம், 5-வது சுலோகம். Pratapachandraroy's Edition, Calcutta.

இதன் பொருள்:—மரமானது தன்னை வெட்டித் தாழ்த்துபவனுக்குப் பக்கத்துள்ள தன் நிழலைக் கொடாது தன்னுள்ளடக்கிக் கொள்வதில்லை. சத்துருவாகவிருப்பினும் நமதிருப்பிடம் தேடி நம்மை நாடி வந்துள்ளவனாயின், அவனுக்குரித்தாமாறு அவனை உபசரித்தல் வேண்டும்.

"சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
யாந்தனையுங் காப்ப ரறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்."

மூதுரை. 30.

இங்ஙனமிருக்க, சில்லாண்டுகளாகத் தமிழ்க்கவி சரிதவாராய்ச்சியிற் புகுந்தார் சிலர் வெவ்வேறு விதமாகக் கூறத்தலைப்பட்டனர்.

(1) திருவள்ளுவரது சகோதரி யெனக்கூறப்படும் ஔவையார்—ஆத்திசூடி கொன்றைவேந்தன் மூதுரை—செய்தருளினரெனவும், பிற்பட்டு கி. பி. 11-வது நூற்றாண்டிற் குலோத்துங்க சோழவரசன் காலத்தவரான ஓர் ஔவையார்—நல்வழி நீதிவெண்பா இயற்றினரெனவும் கொள்ளலே ஏற்புடைத்தா மென்பர் காலஞ்சென்ற சூரியநாராயண சாஸ்திரியார் தமிழ்மொழியின் வரலாறு என்னும் தம் நூலில்.

(2) மகா-௱-௱-ஸ்ரீ பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள் "A Primer On Tamil Literature" (தமிழ்க்கவிசரித முதனூல்) எனப்படும் தமது ஆங்கில நூலில், ஔவையாரைப் பற்றியவளவில் அப்பெயருடையாரிருவரெனச் சாஸ்திரியார் மொழிந்ததனையே பின்பற்றினரெனினும், சிறுவர்களுக்கான வடித்த நூல்களுள் நீதிவெண்பாவு மொன்றெனமட்டுங்கூறி, அதனை ஔவையாரிருவரது நூல்களுள்ளும் சேர்க்காது விட்டனர். மேலும், ஆத்திசூடி கொன்றைவேந்தன் மூதுரை நல்வழியென இந்நான்கும் திருவள்ளுவரது சகோதரியெனக் கூறப்படும் ஔவையார் செய்தருளின ரெனவும், குலோத்துங்க சோழவரசன் காலத்தவரான இரண்டாவது ஔவையார் கல்வியொழுக்கம் அசதிக்கோவை நன்னூற்கோவை நான்மணிக்கோவை

அருந்தமிழ்மாலை தரிசனப்பத்து ஞானக்குறள் பந்தனந்தாதி என்னும் நூல்கள் இயற்றினரெனவும் கூறுவாராயினர்.

(3) செந்தமிழ் இரண்டாந்தொகுதியின் ஆறும் பகுதியிற் பத்திராசிரியர் மகா-ா-ாஸ்ரீ வித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் "ஔவையார்" என்னும் தலைப்பின் கீழாக நீண்ட வரிய பெரிய வியாசம் எழுதியிருப்பது எவருமறிந்ததேயாம். அவ் வியாசத்தின் கண், நற்றிணையினும் குறுந்தொகையினும் நெடுந்தொகையினும் புறநானூற்றினும் தமிழ்நாவலர் சரிதத்தினும் ஔவைபாடல்களெனத் தொகுக்கப்பட்டனவும் அசதிக்கோவையிற் சிலவும் மூதுரை முப்பதும் "அறஞ்செய விரும்பு" அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" என்பன முதலாக வரும் அறவுரைகளும் பிறவும் ஔவையாரால் அமைக்கப்பட்டனவாகு மெனவும், ஔவையார் ஒரு பழைய கதையின்படி திருவள்ளுவரது சகோதரியாவரெனவும் கூறப்பட்டுளது. நல்வழியைப் பற்றி யொன்றுமே அவ் வியாசத்திற் காணப்படவில்லை.

4. மகா-ா-ா-ஸ்ரீ செல்வகேசவ முதலியார் அவர்கள் "தமிழ்" என்னும் தமது வியாசத்தின்கண் ஔவையாரிருவரெனக் கூறுவிடினும், நல்வழியும் ஔவையாரது நூலேதானெனக்கொண்டு, அதனை ஔவை செய்தருளிய நூல்களின் வரிசையிற் சேர்த்திருக்கின்றனர்.

இனி, மேலே காட்டிய இவர்களது கூற்றுக்களைச் சிறிதிங் காராய்வாம். நீதிவெண்பா ஔவை செய்தருளியதாக அச் சிறு நீதிநூலின் அச்சுப்பிரதிகளிலேனும், தஞ்சைச் சரசுவதீமகாலயத்துச் சேமித்துவைத்துள்ள ஏட்டுப்பிரதிகளிலேனும் தலையேடுகளிற் கண்டிலேம். எவர் கூறவும் கேட்டிலேம். ஆக்கியோன் பெயர் தெரியாத தமிழ்நூல்களுளிதுவுமடங்குமென எவராலுமிதுகாறும் கூறப்பட்டுவந்த நீதி வெண்பாவை, எவ்வாதரவுகொண்டு சாஸ்திரியார் ஔவையாரது நூலெனத் துணிந்து கூறினரோ. மேலும், இன்றளவும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி யென்னும் நீதிநூல்கள் நான்கும் ஔவையாரது நீதிநூல்களென மட்டும் வழங்கிவந்த வுலகவழக்குக்கு மாறாக, அந் நீதிநூல்களியற்றிய ஔ

வையார் இருவராவரெனக் கற்பித்து, அந்நூல்களைப் பகுத்திருபிரிவாக்கித் திருவள்ளுவரது சகோதரியெனக் கூறப்படும் ஓர் ஔவையாருக்கும் குலோத்துங்க சோழவரசன் காலத்தவரெனக் கொள்ளப்படும் ஓர் ஔவையாருக்கும் பங்கிட்டுக்கொடுக்குமாறு நேர்ந்த காரணம் தான் யாதோ. ஓர் ஆதாரவுமற்ற இவரது கூற்றும் கொள்ளற்பாலதோ ?

இது நிற்க. நீதிவெண்பாவிலுள்ள செய்யுட்களை உற்றுநோக்குங்கால், அந் நூலிலுள்ள நூறு செய்யுட்களுள் ஒன்றிரண்டு நீங்கலாக மற்றவை யாவும் முன்னோர் மொழிந்துள்ள மூதுரைகளையே தமிழ் மொழியில் வெண்பாவாக இசைக்கப்பட்டனவாகக் காணப்படுகின்றன. நீதிவெண்பா அவ்வாறமைக்கப்பட்டதாமென்பது, அந்நூலின் றொடக்கத்துள்ள "மூதுணர்ந்தோ ரோதுசில மூதுரையைப் பேதையேன் - நீதிவெண்பா வாக நிகழ்த்துவேன்." என்ற முதலிரண்டடிகளில் அந்நூலாசிரியராலேயே கூறப்பட்டுளது. அவ்வாறியற்றப் பெற்றதென்பதனை யெவரும் கண்டுணருமாறு சிறிதிங்குச் சுட்டிக் காட்டுவாம். (தொடரும்.)

டி. எஸ். குப்புஸ்வாமிஸாஸ்திரி.

---

உ

# திருவள்ளுவரும் சமரசசன்மார்க்கமும்.

உத்தம நாகரிகம்வாய்ந்த இத் தமிழுலகின்கண் இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்தெண்ணூறு வருடங்களுக்குமுன் ஞான திவாகரனாய்விளங்கிய ஆசிரியர் திருவள்ளுவனாரின் பெருமையும்,அவரருளிய திருக்குறளென்னுந் தெய்வப்பனுவலினருமையும், நன்மக்களொவ்வொருவ ருள்ளத்தையும் வளம்படுத்தி மகிழ்செய்வவாயின. அன்றுமுதல் ஒவ்வொரு சாதியாளரும், ஒவ்வொரு சமயிகளும், திருக்குறளைத் தங்கள்தங்கள் நூலென்றும், வள்ளுவரைத் தம்மவர் தம்மவரென்றும், கூறிப்போதருகின்றனர். தமிழ்மொழிவழங்காப்

பிறதேயமாந்தரும், நம் தமிழ்மறையை நன்குபடித்தும் தத்தம் பாஷைகளின் மொழிபெயர்த்தும், ஆராக்காத லுடன்பாராட்டிவருவாராயின், அது நம்மாலெத்துணை பாராட்டப்படுவதொன்றாகும்? உலகில் மக்களெனப்பிறந்தா ரொவ்வொருவரும் அதனைப் பொதுவே போற்றிப் புகழ்ந்துகூறிவரினும் தமிழிலக்கணவிலக்கிய வலிகொண்டு ஐயந்திரிபறக் கற்றுக்கேட்டுணரும் பெருந்தவமுடையார்க்கே அதனருமை பெருமைகள் அளவுபடாவாய்த் தோன்றுவனவாம்.

திருக்குறள் மதுரையி லரங்கேறியகாலத்தில் நிகரற்றகல்வியாளராய்த் தமிழுக்கரசராய்வீற்றிருந்த சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மரும் செவியாரக்கேட்டு மனமார வுவந்து வாயாரப் புகழ்ந்துள்ள பாடல்களினால் அது பிறந்தபொழுதே யாட்சிசெலுத்தும் பெருமதிப்புற்றமை விளங்கும். அவர்கள் இதனை வேதமென்றும், வேதத்தின் மிக்கதென்றும், அமுதமென்றும், அமுதத்தின் மிக்க சுவையுள்ளதென்றும், அகவிருள் நீக்குந்திவாகரனென்றும், எல்லாப் பொருளுமிதன்பா லுள்ளனவென்றும், இதன்பா லில்லாதவெப்பொருளுமில்லையென்றும், இந்நூ லொன்றே கற்கத்தகுந்ததென்றும், மற்றும் பலவாறும் பாராட்டிக் கூறியிருக்கின்றனர்.

இது அக்காலத்திற்றானே அசைக்கவொண்ணாத பிரபலபிரமாண நூலாயிற்றென்பது கடைச்சங்கப்புலவரு ளொருவராகிய சாத்தனார் தாமியற்றிய மணிமேகலைக்காப்பியத்துள், "தெய்வந்தொழாஅள்கொழுநற்றொழுதெழுவாள், பெய்யெனப்பெய்யும்பெருமழையென்றவப், பொய்யில்புலவன்பொருளுரைதேறாய்" எனக்கூறியிருத்தலால் நன்கு விளங்கும்.

இது, யாவருமொருசேரப்புகழு மத்துணைப்பாடெய்துதற்குக் காரணம், "குன்றக்கூறல்" முதலிய குற்றமொன்றுமின்றிச் "சுருங்கச்சொல்லல்" முதலிய அழகெல்லாங்கொண்டுவிளங்குதலும், எல்லாருக்குமொத்த பொதுநீதிகளைப் பசுமரத்தாணியறைந்தாற்போற் பதியக்கூறுதலுமாம். உலகிலுள்ள மாந்தரனைவரும் செந்நெறி கடைப்பிடித் துய்யவேண்டுமென்னும் பெருங்கருணையுடைய வள்ளலாகிய நம் மாசிரியர் சுருதி ஸ்மிருதி புராண இதிகாசங்களின் சாரமான பொருள்களையெல்லா மெடுத்து ஒவ்வொருசாரார்க்கேயுரிய சிறுபான்

மையான சிறப்பியல்புகளையொழித்துத் தூய்மைசெய்து எல்லாருக்கு மொத்தனவும் உறுதிபயப்பனவுமானநீதிகளைத்திரட்டிவெளிப்படுப் பாராயினர். இவ்வுண்மை:—

"சமயக்கணக்கர்மதிவழிகூறா
துலகியல்கூறிப்பொருளிதுவென்ற
வள்ளுவன்." எனக் கல்லாடத்தும்,

"ஒன்றேபொருளென்னின்வேறென்பவேறென்னின்
அன்றென்பவாறுசமயத்தார்—நன்றென்ன
எப்பாலவருமியைபவேவள்ளுவனார்
முப்பான்மொழிந்தமொழி."

எனத் திருவள்ளுவமாலையினுமுள்ள கல்லாடர் திருவாக்குகளால் விளக்கமுறும்.

மனுமுதலிய ஸ்மிருதிகளிலும் மகாபாரதத்திலுமுள்ள எத்தனையோ பல நீதிகளை நாயனார் தழுவியுள்ளாரென்பதுண்மையே. உதாரணமாக:—

(1) அவிசொரிந்தாயிரம்வேட்டலினொன்றன்
உயிர்செகுத்துண்ணாமைநன்று.

(2) மழித்தலுநீட்டலும்வேண்டாவுலகம்
பழித்ததொழித்துவிடின்.

(3) நன்றாகுமாக்கம்பெரிதெனினுஞ்சான்றோர்க்குக்
கொன்றாகுமாக்கங்கடை.

(4) கொலையிற்கொடியாரைவேந்தொறுத்தல்பைங்கூழ்
களைகட்டதனொடுநேர்.

(5) ஈன்றாள்பசிகாண்பானாயினுஞ்செய்யற்க
சான்றோர்பழிக்கும்வினை.

என்பன மனுஸ்மிருதியின் பொருளைக்கொண்டு வந்தனகாண்க.

அங்ஙனம் ஸ்மிருதியாசாரங்களைக் கொள்ளுமிடத்தும் அதிகாரி பேதம் முதலியனபற்றி அதனைத் தூய்மைப்படுத்துரைத்தலு முணர்க.

இனி, "இவர்பொருட்பாகுபாட்டினை அறம்பொருளின்பமென வடநூல்வழக்குப்பற்றியோதினு"ரெனப் பரிமேலழகருரைத்தார். எனினும் தமிழ்வழக்குப்பற்றி யோதினரெனல் பெரிதும் பொருத்த மாம். என்னை? வடநூல் வழக்குப்பற்றி யோதினரெனில், வீட்டுப் பாலெனவொன்றுகூறல்வேண்டும்; அங்ஙனங்கூறுமையானும், பொரு ளினை அகம்புறமெனப் பகுத்து அகத்தின்கணின்பமும், புறத்தின்க ணறனும் பொருளுங்கூறிப் புறத்தின் பகுதியாகிய காஞ்சித்திணைக் கண்ணே அவற்றது நிலையின்மைகூறுந் தமிழ்வழக்குப்பற்றி ஆசிரியர் வீடொழிய ஏனைமூன்றுமேகூறி அவற்றின் நிலையின்மையைப் புறத் தைச் சாரவைத்தமையானு மென்பது. இவ் வுண்மை பொருளதி காரவாராய்ச்சியுடையார்க்கு நன்குபுலனும். வீட்டினை யிலக்கண வகையாற்கூறுதல் தமிழ்வழக்கன் றென்பதனைப் பரிமேலழகரும் நச்சினார்க்கினியரும் உரைத்தவுரைகளாலுமுணர்க. அங்ஙனமாயி னும் தெய்வப்புலவர் அகம் புற மெனப்பகுத்துப் பெயர்கொடாமை யானும், முதற்கண்வைக்கற்பாலதாகிய வின்பத்தினை யிறுதிக்கண் வைத்தமையானும் பரிமேலழகர், "வடநூல்வழக்குப்பற்றியோதினு" ரெனக்கூறியதுஞ் சாலும்.

உலகியலின்வழுவாதொழுகிப் பின்னவற்றது நிலையின்மைகண்டு பிறப்பினையஞ்சித் துறவெய்தி யவாவறுத்தாரால் ஒருதலையானெய் தற்பாலதாகிய வீட்டினைப் பண்டைத்தமிழ்மக்கள் இலக்கணவகை யாற் கூறுதொழிந்தது ஜனசமூகத்தின் சமாதானவாழ்க்கையை விரும்பிய அன்னவரின் நாகரிகமுதிர்ச்சியை விளக்குமேயன்றிப் பிறி தில்லை. ஞானசாஸ்திரம் பயிலத்தொடங்கிய விக்காலத்துச் சமாதான மின்மை மிக்குவருதல் கண்கூடாகலான். எனினும், "மறுவில்செய்தி மூவகைக்காலமும், நெறியினாற்றியவறிவ"ராகுஞ் செந்நாப்போதார் வீட்டியலினைச் சிறிதுங்கூறுதொழிந்தாருமல்லர்.

இனி, தெய்வப்புலவர் எல்லாருக்குமொத்த நீதிகளைக்கூறிப் போந்தாரெனவே அவர்தாம் ஒரு சமயத்திற் கட்டுண்டவரன்றி யெல்

லாச் சமயங்களையு மொருங்கொப்பக்கொண்டவராவாரெனின், அது பொருந்தாது. உலகியலே யொருபடித்தாக முழுது மொத்திருப்ப தில்லை. உலகிலுள்ளமாந்த ரொவ்வொருவரும் அறிவுமுதலியவற் றில் வேறுபட்டவராயேயிருப்பர். அவர்கள் தம்முடைய அறிவா தியவற்றின் வன்மை மென்மைகட்கேற்ப வெவ்வேறுவகையான உத்தியோகங்களைமேற்கொண்டு ஏற்றமுந் தாழ்வுமான பலப்பே றுடையராதலுமுண்மை. அங்ஙனமே அனைவரும் கன்மத்தாலும் அறிவாலுமொத்தவராகார். அவற்றிற்கேற்ப அவர்க ணின்றொழுகத் தக்க சமயங்கள் பலவு முலகிற் கின்றியமையாதனவே. அவையெல்லா மொத்தனவாகா. வள்ளுவனாரும் ஒருசற்சமயத்தை யடைந்தே யிருந்திருக்கவேண்டும். ஆயின் சமரசசன்மார்க்கம் என்பதென்னை யெனின், அது வேறெச்சமயத்தையும்விரோதியாத நலப்பாடமைந்த மெய்ச்சமயமென்றே கொள்ளத்தகும். இவ்வுண்மை கருதியன்றே !

சன்மார்க்கஞானமதின்பொருளும்வீறு
சமயசங்கேதப்பொருளுந்தானொன்றாகப்
பன்மார்க்கநெறியினிலுங்கண்டதில்லை
பகர்வரியதில்லைமன்றுட்பார்த்தபோதங்
கென்மார்க்கமிருக்குதெல்லாம்வெளியேயென்ன
வெச்சமயத்தவர்களும்வந்திறைஞ்சாநிற்பர்
கன்மார்க்கநெஞ்சமுளவெனக்குந்தானே
கண்டவுடனானந்தங்காண்டலாகும்.

என்னுந் திருவாக்கெழுவதாயிற்று. அவரவர் கன்மபரிபாகத்திற் கேற்பப் பல மதங்கள் வேண்டுவனவேயென்றும், எல்லாமதங்களும் மேலான ஒப்பற்ற லக்ஷியத்தையடைதற்கமைந்த சோபானங்களே யென்றும், தத்தம் நெறியின் வழுவாதொழுகினரனைவரும் அதனை யடைதலொருதலையென்றும், எல்லாருக்குஞ் சித்திமுத்திகளைத் தரத் தக்க தனிமுதற்பரம்பொருளொன்றேயென்று முணர்ந்து ஒவ்வொ ருவரும் தத்தம்நெறியின் வழுவிக்கேடுறாவண்ண முபதேசித்தலே சன்மார்க்கரின் கடமையாகும். அத்தகையரே நம் நாயனாருமென்க.

நாயனார், பௌத்தர், சைனர் முதலியோரிலொருவராகாரென் பதைப்பற்றிச் சேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமத்-ரா. இராகவையங்

காரவர்கள் தக்க நியாயங்காட்டி முன்னரே யெழுதியிருத்தலின் அவர்வேதவழிப்பட்ட ஓர்மதத்தினரென்பதே துணிபு. நாயனார் சைவரல்லரென்றுவது, வைணவரல்லரென்றுவது கூறுதற்குத்தக்க ஆதார மொன்றுமேயில்லை. அவர் வேதத்தையும் வேதவழித்தான வேள்வியையுங் குறித்திருக்கிறார். திருமாலுலகளந்தது, இந்திரன் சாபமெய்தியது, முதலிய புராணகதைகளையுங் கூறியிருக்கிறார். அந்தணர் முதலிய நான்கு வருணத்தையு மங்கீகரித்திருக்கிறார். பிரமசரியம், முதலிய நால்வகைநிலையினை மேற்கொண்டுமுள்ளார். அந்தணர்க்கு ஆறுதொழிலுண்டென்பதும், அவர் வேதத்தை மறக்கலாகாதென்பதும், அவர் ஒழுக்கத்திற்றவறின் வருணமேகெட்டுவிடுமென்பதும் அவராற் கூறப்பட்டுள்ளன. அரசன் கொடுங்கோலனாயின் அவனாட்டிற் பருவமழைபெய்யாதென்று சொல்லியுள்ளார். வாணிகத்திற்குப் பிறர்பொருளையுந் தம்பொருள்போற்பார்க்கும் நீதி வேண்டுமென்றனர். எல்லாத்தொழிலினும் உழவுதொழிலையே தலையாய தொழிலெனப்புகன்றனர். தேவர்கட்குப் பூசனையுந் திருவிழாக்களுஞ் செய்யவேண்டுமென்பதும், பிதிரர் கடன் இறுக்கவேண்டுமென்பதும் ஆசிரியர்க்குடன்பாடே. பஞ்சதன்மாத்திரை முதலிய தத்துவங்களை யாராய்ச்சிசெய்யின், பிரபஞ்ச உண்மையறியப்படுமென்று கூறுகிறார். வாத பித்த சிலேத்துமங்கள் இன்னகாலத்திற் றுன்பஞ் செய்யுமென்ற மருத்துவநூற்கொள்கையை யெடுத்துக்காட்டுகிறார். ஒருபிறப்பிற் செய்தவினையின்பயன் எழுபிறப்புவரையிற் றொடருமென்பது மவர்கருத்தாகும். உரியவிடங்களிற் சைவாகமங்களின் கருத்துக்களைத் தழுவுகிறார். இவற்றிற்கெல்லா முதாரணம் திருக்குறளி லாண்டாண்டுக்காண்க.

இனி, பகவன், வாலறிவன், வேண்டுதல்வேண்டாமையிலான், இறைவன், ஐந்தவித்தான், தனக்குவமையில்லாதான், அறவாழியந்தணன், எண்குணத்தான், பற்றற்றான், மெய்ப்பொருள், உள்ளது, செம்பொருள் என்ற பெயர்களாற் பசுபதியாகிய தனிமுதல்வனையுணர்த்தி அவனிலக்கணங்களைத்தொகுத்தும் வகுத்துங்கூறியருளினார். "தனக்குவமையில்லாதான்" எனவே முதல்வன் ஒருவனேயென்பது ஆசிரியர் கருத்தாயிற்று. பரிமேலழகரும் "பொருள்சேர் புகழ்" என்பதற்கு "இறைமைக்குணங்க ளிலராயினாரை யுடையரெ

னக் கருதி அறிவிலார் கூறுகின்றபுகழ்கள் பொருள்சேராவாகலின் அவைமுற்றவுமுடைய இறைவன்புகழே, பொருள்சேர்புகழெனப் பட்ட" தென்றும், எண்குணங்களிவையென வுணர்த்தியபின்னர், "இவ்வாறுசைவாகமத்திற் கூறப்பட்டது" என்றுங்கூறுவாராயினர். தெய்வப்புலவர் இங்ஙனங் கடவுளைக்கூறியவிடங்களில் ஓரிடத்தேனும் எம்மதத்தினரும் விரோதியாவாறு குறிப்பித்துச்சென்றமையே அவரது சமரசநிலையினை நன்கு விளக்குவதாயிற்று.

முதற்குறளினாலே உலகிற்கு நிமித்தகாரணனாகிய பதியும், அவனாற் காரியப்படும் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாகிய மாயையும், அப்பதியையும், பிரபஞ்சத்தையும் அறிந்தனுபவிக்கும் பசுக்களுமுள வென்பது பெறப்பட்டது. "இருள்சேரிருவினையும்," "மருளானு மாணாப்பிறப்பு" என்னும் பிரமாணங்களால் இருள், மருள் என்னும் பரியாய நாமங்களையுடைய அவிச்சை அல்லது ஆணவமலம் ஒன்றுண் டென்பதும், அதனைப்பற்றியே இருவினைகள் நிகழுமென்பதும், இருவினையும் பிறவிக்கேதுவென்பதும், பிறவியுள்ளகாறும் துன்பம் ஒருதலையானுண்டென்பதும் பெறப்பட்டன. "பிறவிப்பெருங்கடனீந் துவர்நீந்தா, ரிறைவனடிசேராதார்" என்னுங் குறளாலும், "காரண காரியத்தொடர்ச்சியாய்க் கரையின்றிவருதலின், 'பிறவிப்பெருங் கடல்' என்றார்." என்னுமுரையாலும் இருவினையும் பிறவியும் தம் முட் காரணகாரியமாய் அநாதிதொட்டே வருகின்றனவென்பதும், இறைவனடியைச்சேர்ந்தே பிறவியறுக்கவேண்டுமென்பதும் பெறப் பட்டன. "வினையின்வந்தது வினைக்குவிளைவாயது" என்பதுங்காண்க.

பொய்யில் புலவராகிய நம்மாசிரியர் உலகியனீதிகளையும் கடவுட் டிருநாமங்களையும் அனைவருமொப்புமாறு கூறியதுபோலவே வீடு பேற்றிற்குச் சிறந்த சாதனமாகிய பிறவேதுக்களையுங்கூறிப் போதரு மாற்றல் நம்மாற் புகழப்படுவதன்றோ?

(1) நில்லாதவற்றைநிலையினவென்றுணரும்
புல்லறிவாண்மைகடை.

(2) யானெனதென்னுஞ்செருக்கறுப்பான்வானோர்க்
குயர்ந்தவுலகம்புகும்.

(3) பொருளல்லவற்றைப்பொருளென் றுணரு
மருளானாம்மாணாப்பிறப்பு.

(4) அவாவில்லார்க்கில்லாகுந்துன்பமஃதுண்டேற்
றவாஅதுமேன்மேல்வரும்.

என்னுந்திருவாக்குகளைச் சைவர், வைணவர், வேதாந்திகள், பௌத்தர், சைனர் முதலியோரில் உண்மையெனப்போற்றாதா ரியாவர்? இங்ஙனம் யாவர்க்கும்பொதுவே கூறிச்செல்லும்நயம், "வேண்டும் பனுவற்றுணிவு," "நூலோர்தொகுத்தவற்றுள்," "பல்லாற்றாற்றேரினும்" என்னும் பிரமாணங்களாலும் வலியுறுவதாகும். தெய்வப் புலவரதுண்மைக் கருத்தையுணர்ந்த ஆசிரியர் பரிமேலழகியாரும், "பனுவலெனப் பொதுப்படக்கூறியவதனால் ஒன்றையொன்றொவ்வாத சமயநூல்களெல்லாவற்றிற்கும் இஃதொத்த துணிவென்பது பெற்றாம்." என்றும், "எல்லா நூல்களினும் நல்லனவெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக்கூறுதல் இவர்க்கியல்பாகலின் ஈண்டும்பொதுப்பட, 'நூலோர்' என்றும்" என்றும், "ஒன்றையொன்றொவ்வாதசமய நெறிகள் எல்லாவற்றானுமாராய்ந்தாலும் துணையாவது அவ்வருளே" என்றும், "மயங்கியவழிப் பேய்த்தேரிற் புனல்போலத்தோன்றி மெய் யுணர்ந்தவழிக் கயிற்றிலரவுபோலக்கெடுதலிற் பொய்யென்பாரும், நிலைவேறுபட்டுவருதலாற் கணந்தோறும் பிறந்திறக்குமென்பாரும், ஒருவாற்றான் வேறுபடுதலும், ஒருவாற்றான் வேறுபடாமையும் உடைமையின் நிலையுறுதலும், நிலையாமையும் ஒருங்கேயுடையவென் பாரும் எனப்பொருட்பெற்றி கூறுவார் பலதிறத்தாராவார்; அவரெல்லார்க்கு மவற்றதுநிலையாமையுடம்பாடாகலின் ஈண்டு அதனையே கூறுகின்றார்." என்றும் உரைவிரிப்பாராயினர்.

உலகப்பொருள்களின் நிலையாமையை யுணரவேண்டுமென்பதும், உணர்ந்ததுணையானே அவற்றின் மேலுள்ள பற்றுக்களையும் தாம் நுகர்தற்குவைத்திருந்த அப்பொருள்களையும் ஒருங்கே துறக்கவேண்டுமென்பதும், அங்ஙனந்துறத்தற் குபாயம்பற்றற்றான் பற்றினைப் பற்றித் தியானசமாதிகளைச் செய்தலேயென்பதும், அவ்வாறு பற்றுக் களைவிட்டு மனம் ஒருவழிப்பட்டவிடத்தும் சந்தேகவிபரீதங்களைப்

போக்கி மெய்யுணர்ந்தாலன்றிப் பயனில்லையென்பதும், மெய்யுணர்வி னிலக்கணமாவது காணப்படுகிற எந்தப்பொருளினிடத்தும் காரண காரியமிரண்டுமின்றி முடிவாய்நிற்கும் முதற்பொருளைக் காண்டலே யென்பதும், அவ்வாறு பதிஞானங்கைவரற்குக் கேள்வி விமரிசம் பாவனையென்ற மூன்றுபாயங்களைச் செய்யவேண்டுமென்பதும், அவற்றினைச்செய்து பதியையுணர்ந்து சோகம் பாவனைசெய்யவே, அவிச்சை வலிகுன்றிச் சஞ்சிதகன்ம மொழியுமென்பதும், பின் ஆகாமியம் ஏறுதென்பதும், பின்னுந்தடையாயுள்ளது பிராரத்துவ வாசனையொன்றே யென்பதும், அதனையும் இடையறாத மெய்ப் பொருளுணர்வாலறுத்துத் திருவருளில் அதீதப்பட்டு நிற்றலாகிய வதுவே பரமுத்தியென்பதும் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனு ரால் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

நாயனுருக்குப் பிற்காலத்தவர்களில் திருக்குறளின்சொல்லையும், பொருளையுமெடுத்துக்கோத்துத் தத்தம் நூல்களையழகுபடுத்தாத வாசிரியர் யாருமில்லை. சைவத்திருமுறைகளிலும், வைணவப்பிர பந்தத்திலும் திருக்குறளின் சொற்பொருள்க ளேறுவவாயின. தமி ழின்கட் சைவசித்தாந்த சாஸ்திரங்களை யருளிச்செய்த திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனுர், சீகாழிக்கண்ணுடைய வள்ளலார், கொற்ற வன்குடி உமாபதிசிவாசாரியார் முதலாயினுரெல்லாம் திருக்குற ளைச்சென்னியிற்கொண்டு போற்றினுர்கள்.

> "தலைப்பட்டார்தீரத்துறந்தார்மயங்கி
> வலைப்பட்டார்மற்றையவரென்று—நிலைத்தமிழின்
> தெய்வப்புலமைத்திருவள்ளுவருரைத்த
> மெய்வைத்தசொல்."

எனப்போற்றினுர் உமாபதிசிவம்.

"கலைமகள்வாழ்க்கைமுகத்ததெனினும், மலரவன்வண்டமிழோர்க் கொவ்வான்" என்னுந்திருவாக்கும் பிறர்திறத்தெங்ஙனமாயினும் நம்மாசிரியர்க்காயின் உண்மையாமன்றே! உருத்திரசன்மர் உடனி ருந்து கேட்டதும், இறையனுருங்கலைமகளாரும் புகழ்ந்ததுமாகிய பொய்யாமொழியின் மாண்பினை யுடம்பெல்லா நாவாகக்கொண்டு ஊழிகாலமெல்லாமுரைக்கினு முரைக்கலாகுமோ?

தேவர்குறளுந்திருநான்மறைமுடிவும்
மூவர்தமிழுமுனிமொழியுங்—கோவை
திருவாசகமுந்திருமூலர்சொல்லும்
ஒருவாசகமென்றுணர். (ஔவையார்.)

மு. வேங்கடசாமிநாட்டார்

---

உ

# புட்பபந்தம்.

(ருஉ-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

உத்தரம் அஸ்தம் சித்திரை சுவாதி இந்த நாட்களில் ஒரு நாளில் மழை பெய்தால், அவ்வருஷத்தில் 20 துரோண மழையுண்டு.

திருவாதிரை மகம் இந்த நாட்களில் ஒரு தினம் மழை பெய்தால், அவ்வருஷத்தில் 13 துரோண விருஷ்டியுண்டு. புனர்பூசம், ஆயில்யம், பூர மிவற்றுளொன்றில் மழை பெய்தால், 8 துரோண மழையவ்வாண்டிலுண்டு.

ஜேஷ்ட மாதத்தில் எந்தக்கிரகத்தோடு சந்திரன்கூடியபொழுது முதலில் மழை பெய்யுமோ அந்தக்கிரகத்தைக்கொண் டவ்வருடத்திற்கு மழைப் பிரமாணஞ் சொல்லவேண்டும்.

ஜேஷ்ட மாதத்தில் முதன் மழை பெய்யுங்காலைச் சந்திரன் குருவோடிருந்தா லவ்வாண்டில் மழையுண்டு. சந்திரன் சுக்கிரனுடன் கூடியிருக்கையில் முதன் மழை பெய்தாற் பயிர்விருத்தியுண்டு. சந்திரன் குரு சுக்கிரருடன் சேர்ந்த காலத்து முதன் மழை பொழியின் அந்த வருஷத்தில் நல்லமழை பெய்யும். சந்திரன் அங்காரகனோடிருந்தாற் பயிர் நாசமாம். சந்திரன் புதனோடிருந்தாற் கீழ்காற்றுண்டு. அவர் சனியுடன் கூடியபொழுது முதன்மழை பெய்தால், அவ்வாண்டில் ஜனங்கட்கு ரோகம், இராஜ கலக மிவையுண்டு. முதன் மழை

பெய்யுங்காலை சந்திரனுடன் சூரியன் கூடினா லவ்வாண்டில் மழை யில்லை. பயிர்நாசமுண்டு. அரசர்களுள் பரஸ்பரங் கலகமுண்டாம்.

சூரியனுஞ் சந்திரனுங் கூடியபோது சூரியமண்டலங் கருப்பா யிருந்தாற் பூமியிலுள்ள ஜனங்கட்கு அவமிருத்யு உண்டு.

வைசாகத்திலாவது ஜேஷ்டத்திலாவது சூரியன் உரோகிணியி லிருக்கும்போது பொழியும் முதன்மழை நீர்த்துளியை யுள்ளங்கை யிற் பிடித்தருந்தி உருசிபார்க்கவேண்டும்.

மழைத்துளியை யுள்ளங்கையிற் பிடித்தருந்த உப்பாயிருந்தால் அவ்வாண்டில் கோதுமையுஞ் சோளமுஞ் செம்மையாய் விளையும். உருசியிலதேல் அவ்வருஷத்தில் மழையில்லை.

மதுரமாயிருந்தால் எல்லாப்பயிர்களும் பூரணமாய்ப் பலிக்கும்: புளிப்பானால் தானியங்களிற் பதர் விசேஷமாயிருக்கும். காரமாயின் தினை விசேடமாய்ப்பலிக்கும். கலப்பாயிருந்தாற் சாமை கேழ்வரகு கம்பு வரகு இவை செவ்வையாய்ப் பலிக்கும். கசப்பாயிருந்தால் உழுந்து எள் கொள்ளு பச்சைப்பயறு பஞ்சு இவையதிகமாக வுற் பத்தியாகும்.

ஆஷாடசுத்த பிரதமையில் மிருகசீருட நக்ஷத்திரமிருக்கும் பொழுது ஆகாயத்தில் அதிகமாய் மேகங்கள் பாவினால் அவ்வருஷா ரம்பத்தில் விதைக்கிற பயிர்கள் விசேஷமாய்ப் பலிக்கும்.

அன்று சாயந்திரம் மேற்கே மேகங்கள் பரவினால் அவ்வாண் டில் எல்லாப்பயிர்களும் செத்துப்பலிக்கும்,

ஆஷாடமாதத் திருபக்ஷத்துமுள்ள நவமி தசமி பௌர்ணமி ஆகிய இத்தினங்களில் மழைபெய்தால் அவ்வாண்டாரம்பத்தே விதைக்கும் பயிர்கள் செவ்வையாய்ப் பலிக்கும்.

ஆஷாடமீ" சுக்கிலபக்ஷ பௌர்ணமி பகல் நாலு ஜாமத்திலும் காற்று வீசிக்கொண்டிருந்தால், ஆவணிமீ" முதல் நான்கு மாதங்கள் வரை நல்ல மழையுண்டு.

மழை யறிதற்கு மேற்சொல்லப்பெற்ற தினத்திற் கொடிகட்டிப் பார்க்கு மிலக்கணம்.

ஆஷாடமீ சுக்கிலபக்ஷ பௌர்ணமி காலையில் ஒழுங்கானதும் இருபத்துநான்கு முழமுள்ளதுமான ஒரு மூங்கிலில் துகில்கட்டிப் பார்க்கவும். முதற் சாமத்தில் தென்கிழக்குக் காற்றடித்தால் ஆவணி மாதத்தில் மழையுண்டு. வடகாற்றடித்தா லம்மாதத்தில் மழையில்லை. இரண்டாஞ் சாமத்திற் கீழ்காற்றடித்தால் புரட்டாசியில் மழை யுண்டு. ஈசானக் காற்றடித்தால் மழையில்லை. மூன்றுஞ் சாமத்தி லீசானக் காற்றடித்தால் ஐப்பசியில் மழையுண்டு. தென்மேற்குக் காற்றடித்தால் மழையில்லை. நாலாவது சாமத்தில் வடமேற்குக் காற் றடித்தால் கார்த்திகையில் மழையுண்டு. தென்காற்றடித்தால் மழை யில்லை.

ஆஷாட கிருஷ்ணபக்ஷ பிரதமை சதுர்த்தி பஞ்சமி ஷஷ்டி இந் தத் திதிகளில் மழைபெய்தால், அந்த வருஷம் மழைபெய்து பயிர்கள் விருத்தியாகும்.

ஆஷாட கிருஷ்ண சப்தமியிற் சந்திரன் மீனத்திலிருக்கும் பொழுது சந்திரனைப் பரிவேடம் சூழ்ந்தால், பூமியில் நல்ல பலித முண்டு.

ஆஷாடபகுள அஷ்டமியிற் காற்றடித்தாலும், நவமியில் மின் னல் மின்னினாலும், தசமியில் உரோகிணி வந்தாலும் அவ்வருஷம் நல்ல மழையுண்டு.

ஆஷாடபகுள ஏகாதசிமுதல் அமாவாசியைக்குள் மழைபெய் தால், பூமியில் நல்ல மழை பொழிந்து பயிர் விருத்தியும் அர்க்க விருத்தியுமுண்டு.

சிராவண சுக்கிலபக்ஷத்தில் சித்திரை சுவாதி விசாகம் இந்த நாட்களில் தசதாதுக்கள் தோன்றினால் சிராவணமாத கர்ப்பமுண்டு.

சித்திரையில் தசதாதுக்கள் தோன்றினால் அநுடம் முதல் எட்டு நக்ஷத்திரங்களில் நல்லமழையுண்டு. சுவாதியில் தசதாதுக்கள் தோன் றினாற் பூரட்டாதி முதல் எட்டு நக்ஷத்திரங்களில் நல்ல மழையுண்டு.

விசாகத்தில் தசதாதுக்கள் தோன்றினால், திருவாதிரை முதல் எட்டு நக்ஷத்திரங்களில் நல்ல மழையுண்டு.

சிராவணமீ சுக்கில கிருஷ்ணபக்ஷ தசமியில் மப்புப் பரவினால் அது முதல் நல்ல மழை பெய்து பயிர் விருத்தியுண்டாகும்.

சிராவண கிருஷ்ணபக்ஷ சதுர்த்தியில் மழை பெய்தால் முதற் பயிர் கெட்டு இரண்டாவது பயிர் விருத்தியாகும்.

சிராவண பகுள அமாவாசியையில் எவ்வளவுதூரம் மழை பெய்யுமோ அவ்வளவுதூரம் வரை யவ்வாண்டில் மழை பெய்து பயிர் பலிக்கும்.

சிராவண மாதத்திற் சித்திரை சுவாதி விசாகம் இந்நாட்களில் மழைபெய்தால், அந்தவருஷம் தானியம்பலிக்கும். ஆகையாற் பழைய தானியங்களை விற்றுவிட்டுத் தனஞ்சம்பாதிக்கவேண்டும். மேற் சொன்ன மூன்று நக்ஷத்திரங்களில் மழை பெய்யாவிட்டாற் பயிர் கெட்டுப்போகும். ஆதலால் இரத்தினங்களிருந்தாலும் அவைகளை விற்றுவிட்டுத் தானியங்களை வாங்கிச் சேர்த்துவைக்க வேண்டும்.

பாத்ரபதமாத சுத்தபிரதமை முதற் சுவாதிவரை மழையுங் காற்றுமிருந்தால் அதுமுதல் நல்ல மழை.

அந்தமாதத்திற் சதயமுதல் மூன்று நக்ஷத்திரங்கள் வரை தசதாதுக்கள் தோன்றின், பின்னர்ப் பயிர் செவ்வையாய்ப் பலிக்கும்.

பாத்ரபத பௌர்ணமியில் மழையில்லா திடியிடித்தா லவ்விடி யெவ்வளவுதூரங் கேட்குமோ அத்தூரம்வரை மழையில்லாது பயிர் கெட்டுப்போம்.

பாத்ரபதமாத பௌர்ணமி முதல் மிருகசீரிடம்வரை மழைபெய்தாற் கார்த்திகை மாதத்தில் அதிக மழைபொழிந்து பயிர் விருத்தியாகும்.

ஆஸ்வீஜ சுத்தத்திற் சுவாதிமுதல் நான்கு நக்ஷத்திரங்கள்வரை மழைமொழிந்தாற் பயிர் பூரணமாய்ப் பலிதமாகும்.

ஆஸ்வீஜபகுள திரயோதசியிலும் அஸ்தமுதல் ஐந்து நக்ஷத்திரங்களிலும் காற்றுடன் மழைபொழிந்தாற் சகலவகைப் பயிரும் செவ்வையாய்ப் பலிக்கும்.

அஸ்தத்தில் இரவியிருக்கும்போது மழைபெய்தாற் பூமியில் விசேஷமாய் மழைபெய்து பயிர் பலித்துச் சுபிக்ஷமாயிருக்கும்.

சூரியன் ஓரிராசியினின்று மற்றோரிராசிக்குப் பிரவேசிக்குங் காலத்தினும், சுக்கில கிருஷ்ணபக்ஷங்களின் கடைசியிலும் *பௌர்ணமி யமாவாசியை சந்திப்பினும் ஒவ்வோர் திதியினீற்றினும், †இராசி சந்திப்பினும், ‡ இலக்கின சந்திகளிலும் மழைக்காதாரமென்றறிக.

தவளைகள் ஜலத்தினின்று விலகிக் கரையில்வந்து கத்தினுலும், அவை மரத்திலேறினுலும், அவற்றின் நுரை மரத்தடியி லுண்டானுலும், அவை பரஸ்பரஞ் சண்டையிட்டுக்கொண்டாலும், மிருகங்கள் தண்ணீரிலிறங்கி நீரருந்தாது ஆகாயத்தைப் பார்த்தாலும், மீன்கள் மேலே கிளம்பிக் குதித்தாலும், பக்ஷிகள் சாம்பரிற் புரண்டாலும், நாகப்பூச்சி வெயிலிற் புரண்டாலும், ஆடு புற்றின்மேலேறினுலும், எறும்புகள் முட்டை கொண்டுபோனுலும், பசுக்கள் குதித்துக்காதை ஆட்டினுலும், அவை யதிகமாகத் தும்மினுலும், தூசியெழ அவை ஓடினுலும் மழைவருமென் றறிக.

சூரியனுக்கு வடக்கே மற்றொரு சூரியன் றோன்றினுல் விசேஷ மழை. தெற்கே தோன்றினுல் விசேஷக் காற்று. இருபக்கங்களிலுந் தோன்றினுல் அத்தேசத்திற்குச் சத்துருபயமாவது விசேஷ மழையாவதுண்டு. மேற்கே தோன்றினுல் அரசர்களுக்குக் கெடுதி. கிழக்கே தோன்றினுல் ஜனங்கட்கே கெடுதி.

ஜேஷ்டம் ஆஷாடம் சிராவணம் இம்மூன்று மாதங்களிற் பூசம் முதல் ஏழு நக்ஷத்திரங்கள் வரை கிழக்கிலும் மேற்கிலும் வானவில் லிருந்தால் அனுவிருஷ்டியும் க்ஷாமமுமுண்டு. சுக்கிலபக்ஷத்தில் மேற்சொன்ன ஏழு நக்ஷத்திரங்கள் தவிர மற்ற நக்ஷத்திரங்களில் மேற்கே மாத்திரம் வானவில்லிருந்தால் சுபிக்ஷமும் மழையுமுண்டு.

---

* இவைகளின் முடிவில் இரண்டு நாழிகை.

† மேட சிம்ம தநுசு இவைகளின் ஆரம்பத்தில் அரைநாழிகையும் கர்க்கி விருச்சிக மீன மிம்மூன்றி னீற்றில் அரைநாழிகையும் இராசி சந்தி யென்ப.

‡ சமஸ்த இராசிகளின் கடைசிப்பாகங்களும் இலக்கினசந்தியென்ப.

உதயாஸ்தமன காலங்களில் ஆகாயத்தில் மேகம்பரவிக் கிழக்கி னும் மேற்கினும் மின்னன் மின்னினுல் மழையில்லை.

சர்வ திக்குகளிலும் மேகம்பரவி நடு ஆகாயத்தில் மின்னிறு லும், அம் மேகங்களுக்குக் * கோநேத்திரசாயை உண்டானுலும், சூரியோதய சந்தியாகாலங்களிற் சுவானங்கள் ரோதனஞ்செய்தாலும் உடனே மழையுண்டு; அல்லது பரசக்கர பயமுண்டு.

மலை, யானை, மரம், பசு, அல்லி, மனுஷன், முதலை, மச்சம் பன்றி, ஒட்டகம், எருமை, ஸ்திரீ, ஆலமரம், மெத்தைவீடு, † கர்ச்சூர விருக்ஷம், மணல்மேடு, அலை, எருது, கட்டில், கொடி, சாமரை, குடை இவைகளைப்போல மேகங்கள் தோன்றினுல் மழையுண்டு.

கிழக்கிலும் மேற்கிலும் காலையிலும் மாலையிலும் ‡ மூங்கில்போல மேகம் பரவிக் கறுப்பாகவாவது சிவப்பாகவாவது இருந்தால் உடனே மழையுண்டு.

வீணை, கொடி, செவ்வல்லி, சிவப்புவஸ்திரம், மனுஷன், மயில், குரங்கு, நாய், நரி, சர்ப்பம், கரடி, ராக்ஷசசைனியம், மயிலிறகு, இவைபோல் மேகம் பரவின் உடனே மழைவரும்.

கருமேகங்களில் மின்னினுலும், ஆகாயத்தில் மேகமில்லாது மின்னினுலும் காற்றினுல் மேகமுடைந்து போனுலும் அவ்வாண்டில் மழையில்லை.

மத்தியானத்திற் கருப்புமேகம் பரவிச் சாயந்திரத்தில் மப்பில் லாது ஆகாயம் நிர்மலமாயிருந்தாலும், ஆகாயத்திற் சுற்றினுலும் புலி யைப்போற் சாரி சாரியாக வெண்மப்புகளிருந்து நடு ஆகாயம் நிர்மலமாயிருந்தாலும் மழையில்லை.

காலையில் தூரத்திலிருந்து மத்தியானத்தில் மேகஞ்சூழ்ந்து இராத்திரியில் ஆகாயம் நிர்மலமாயிருந்தால் அத்தேசத்தில் மழை யில்லை.

---

* விளங்கவில்லை. பின்னரெழுதப்பெறும்.

† கழற்கொடி, பேரீந்து.

‡ மேகங் காலிறங்குதல்.

ஞாயிற்றுக்கிழமையில் மிருகசீருடமும், திங்கட்கிழமையிற் திருவாதிரையும், செவ்வாய்க்கிழமையில் ஷஷ்டியும், புதன்கிழமையில் திருதியையும், வியாழக்கிழமையில் ஏகாதசியும், வெள்ளிக்கிழமையில் திரயோதசியும், சனிக்கிழமையில் மூலமும் வரின் ஜலயோக நாட்களென்றறிக.

அஸ்வதி பரணி கார்த்திகை யிவைகளிற் புத சுக்கிரர் கூடியிருந்தால் அற்பவிருஷ்டியுண்டு. உரோகிணி மிருகசீருடம் திருவாதிரை இவைகளில் அவர்களிருந்தால் அனுவிருஷ்டியுண்டு. புனர்பூசம், பூசம், ஆயில்ய மிவைகளிலிருந்தால் அதிவிருஷ்டி யுண்டு. மகம்முதல் ஏழு நக்ஷத்திரங்கள் வரை கூடியிருந்தால் சுவிருஷ்டியுண்டு. அநுடம்முதல் ஒன்பது நட்சத்திரங்கள்வரை கூடியிருந்தால் விருஷ்டிநாசமுண்டு. உத்திரட்டாதி ரேவதி யிவற்றிற் கூடியிருந்தால் சுவிருஷ்டியுண்டென்றறிக.

அபிஜித்து நக்ஷத்திரத்தைச்சேர்த்து 28 நக்ஷத்திரங்களையும் கார்த்திகைமுதல் சர்ப்பாகாரமாய் ஏழு நாடியாக எழுதிக்கொள்க.

முதலாவது * அமிர்தநாடி 2-வது ஜலநாடி 3-வது இரசநாடி, 4-வது சௌமியநாடி, 5-வது தகனநாடி, 6-வது வாதநாடி, 7-வது சண்டநாடி எனக் கொள்க.

கார்த்திகை விசாகம் அநுடம் பரணி இவைகளைச் சண்டநாடி அல்லது ஊர்த்துவநாடி யென்ப. இதற்கதிபதி சனி.

உரோகிணி, சுவாதி, கேட்டை, அஸ்வதி இந் நான்கினையும் வாயுநாடி யென்ப. இதற்கதிபதி சூரியன்.

மிருகசீருடம் சித்திரை மூலம் இரேவதி இவைகளைத் தகனநாடி யென்ப. இதற்கதிபதி அங்காரகன்.

திருவாதிரை அஸ்தம் பூராடம் உத்திரட்டாதி இவைகளை நிரஸநாடியென்ப. இதற்கதிபதி குரு.

புனர்பூசம் உத்திரம் உத்தராடம் பூரட்டாதி இந் நான்கையும் ஜலநாடி யென்ப. இதற்கதிபதி சுக்கிரன்.

---

* அமிர்தநாடியென்பது விளங்காததாற் பின்னரெழுதப்பெறும்.

பூசம் பூரம் அபிஜித்து சதயம் இந் நான்கையும் மேகநாடி யென்ப. இதற்கதிபதி புதன்.

ஆயில்யம் மகம் திருவோணம் அவிட்டம் இந் நான்கையும் இரச நாடி யென்ப. இதற்கதிபதி சந்திரன்.

சந்திரன் அமிர்தநாடியிலிருந்தால் 3, 4, 5, 7-இத் தினங்களில் ஒரு நாண் மழையுண்டு.

சந்திரன் ஜலநாடியில் இதர கிரகங்களோடு சேர்ந்திருந்தால் ஒன்றரைநாள் விடாமழையும் அல்லது ஐந்து நாள்வரை விடாமழை யும் மூன்று அல்லது நான்கு நாள்வரை விடாமழையும் பொழியும் மற்றவைகளுக்கும் அவ்விதமே யறிக.

நிரஸ நாடியிற் சந்திரன் இதர கிரகங்களோடு சேர்ந்திருந்தால் ஒன்றரை நாள் அல்லது முப்பது நாள்வரை விடாமழை யுண்டு.

அமிர்தநாடிமுதல் மூன்றுநாடியில் சந்திரன் சுபக்கிரகங்களோடு கூடியிருந்தால் 18 - 12 அல்லது 16 நாள்வரை விடாமழை யென் றறிக.

சௌமிய நாடியிற் சப்த கிரகங்களுமிருந்தால் மூன்றுநாள் விடா மழை. மற்ற மூன்று நாடிகளிலும் கிரகங்களிருந்தால் மேகங்கள் உடைந்து பனித்தூறலாய் இருக்கும்.

யாம்ய நாடியில் குரூர கிரகங்களிருந்தால் அனுவிருஷ்டி யுண்டு. சுபரும் பாவரும் கலந்திருந்தால் மத்தியவிருஷ்டி யுண்டு.

(தொடரும்.)

தரங்கம்பாடி

ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை

சகோதரன்

ப. அ. கிருஷ்ணஸ்வாமிப்பிள்ளை.

---

# புத்தக வரவு.

1912ளு மேமீ 27வ தஞ்சையிற் கூடிய ஸங்கீதவித்யா மஹா ஜன சங்கத்தின் முதலாவது சங்கரிப்போர்ட்டு வந்தது. அதைப்படித்த தில் நமது புராதன ஸங்கீத வித்யையானது தற்காலத்தில் நிலைகுலைந்து வருவதுகண்டு அது சிதைந்துபடாது பாதுகாக்கக்கருதிச் சங்கீதாபி மானமுள்ள பலகனதனவான்கள் கூடி யொருசங்கஞ் சேர்ந்து ஸங் கீத வித்வான்களைக்கொண்டு அதனபிவிர்த்திக்கு வேண்டுவன செய்து வர எத்தனித்திருப்பதாகத் தெரிவதுடன், ஸங்கீதத்தின்உயர்வு, அதன்உபயோகம், அதன்றற்காலநிலைமை, அதையப்பியசிக்கும் முறை, பாடும்முறை, கேட்கும் முறை, கற்பிக்கும் முறை, முதலிய பல விஷயங்கள் பல ஸங்கீத வித்துவான்களால் உபநியாச ரூபமாகப் படிக்கப்பெற்றுச் சங்கம் செவ்விதின் நடைபெற்றிருப்பதாகவும் தெரிந்து மிகவும் திருப்தியடைகிறோம்.

மனோதத்வதீபிகை:—இது ஸ்ரீமத் - விச்சூர் முத்துக்குமாரசாமி முதலியார் பீ. ஏ. அவர்களால் 126 செய்யுளாயியற்றப்பெற்ற சிறு புத்தகம். இதை வாங்கிப்படிப்பவர்களுக்கு இதன் பயன் நன்குவிளங் கும். இது பண்டிதர்களால் நன்குமதிக்கப்பட்ட அபிப்பிராய பத்தி ரம் பெற்றிருக்கிறது. இதன் விலை ரூ 1 என்று கண்டிருக்கிறது.

குமரேசசதகம்:—(அரும்பதவுரையுடன்) இதுவேலூர்க் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் - பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால் பதிப்பிக்கப்பட் டது. இது கல்விகற்கும் மாணவர்களுக்கு மிகவும் பயன்படத்தக்கது. இதன் விலை அணா இரண்டரை.

தேவாரப்பதிகங்கள்:—காஞ்சிபுரம் இராமாநந்தயோகிகள் எழுதிய வுரையுடன், சென்னை, பு. ஷண்முகமுதலியாரவர்கள் பதிப்பித்து வெளிப்படுத்திய 18, 19, 20, ஆஞ்சஞ்சிகைகள் வரப்பெற்றுத் திருப்தியடைகிறோம்.

மேற்கண்ட புத்தகங்கள் 6ம் வழக்கப்படி பாண்டியன் புத்தக சாலையிற் சேர்க்கப்பட்டன.

ப—ர்.

## மதுரைத் தமிழ்ச்சங்கத்து

# 1912-வருஷம் ஆகஸ்டுமீ" 1௳ முதல் 31௳ முடிவுவரையுள்ள வரவு செலவு கணக்கு

| வரவு. | தொகை ரூபா. | அ. | ப. | செலவு. | தொகை. ரூபா. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 1912ம் வருஷம் ஆகஸ்டுமீ" த்துக்குரிய புதுக்கோட்டைசமஸ்தானம் மாதச்சந்தா வரவு ... | 50 | 0 | 0 | சங்கம் சிப்பந்திகளுக்கு சம்பளம் செல்லாக்கிய வகையிற் செலவு ... | 384 | 7 | 2 |
| செந்தமிழ்ச் சந்தா வகையில் வரவு ... | 42 | 3 | 0 | கலாசாலை மாணவர்களுக்கு ஆகாராதி போஷணைக்காக செல்லாக்கியது ரூ. ... | 59 | 15 | 0 |
| பிரிண்டிங்ஆபீசு அச்சுக்கூலிவரவு 417—11—6 | | | | கலாசாலை மாணவர்களுக்கு புத்தகங்கள் வாங்கிய வகையிற் செலவு ரூ. ... | 5 | 6 | 6 |
| சங்கம் ஆபீசு சம்மந்தமான அச்சுக்கூலி வரவு ... 107—3—9 | | | | பைண்டிங் ஆபீஸ் ரெயில்வே சார்ஜ் 0—9—0 | | | |
| ஆக பிரிண்டிங் ஆபீசு வரவு ... | 524 | 15 | 3 | ஷை ஆபீசு கண்டின்ஜென்ஸி சிலவு 31—0—5 | | | |
| பைண்டிங் ஆபீசு வரவு ... 82—7—6 | | | | ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ... | 31 | 9 | 5 |
| சங்கம்ஆபீசு சம்பந்தமான பைண்டிங் வரவு ... 21—8—0 | | | | பிரின்டிங்ஆபீஸ்ஸ்டேஷனரிச்செலவு 47-10-9 | | | |
| ஆக பைண்டிங் ஆபீசு வரவு ... | 103 | 15 | 6 | ஷை ஆபீஸ் ரயில்வேசார்ஜ் செலவு 0—12—0 | | | |

| | | | |
|---|---|---|---|
| புத்தக விற்பனை வரவு ரூ ... | 171 | 0 | 6 |
| சங்கம் காலிநிலம் மாக்கடை வாடகை நாளது பரீதாபி-ளு ஆடிமீ த்துக்கு வரவு ... 55—0—0 | | | |
| சென்னை A. சிங்காரவேலு முதலியாரவர்களுக்கு அபிதான சிந்தாமணி புத்தகம் 146-பாக்கிங் செய்தனுப்பிய வகையில் செலவான தொகை வி. பி. மூலம் வரவு வந்தது ரூ 2—12—0 | | | |
| ஆக மேற்காட்டிய விவரப்படி வரவு ரூ ... | 57 | 12 | 0 |

| | | | |
|---|---|---|---|
| ஷை ஆபீசு ஆயில்என்ஜின் சம்பந்தமாய் எண்ணெய்ச் செலவு 10—3—5 | | | |
| ஷை ஆபீஸ் கண்டின்ஜன்விச்செலவு 12—1—1 | | | |
| ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ... | 70 | 11 | 3 |
| போஸ்டேஜ் வகையிற் செலவு ... | 31 | 0 | 0 |
| பிரிண்டிங்ஆபீஸ் உத்தியோகத்திற்கு பிளாக்கு வாங்கிய வகையிலும், சென்னை ஓக்ஸ் அன் கோவிலிருந்து தருவித்த சின்ன பிளாட்டன் மைரோலர், ஸ்பிரிங் வி. பி. கிரயங் கொடுத்த வகையிலும் செலவு ரூ. ... | 7 | 15 | 0 |
| கலாசாலை உபயோகத்துக்கு கரோசன் ஆயில் வாங்கியது ரூ. 0—3—4 | | | |
| ஷை உபயோகத்துக்கு ஸ்டேஷனரி சாமான்கள் வாங்கியது ரூ. 2—9—0 | | | |
| ரசீது லேபிள் 0—7—0 வண்டி வாடகை செலவு 1—1—0 ஆக செலவு ரூ. ... 1—8—0 | | | |
| அபிதான சிந்தாமணி பாக்கிங் செய் செய்தனுப்பிய வகையிற் சிலவு ரூ. 2—3—0 | | | |
| திருமங்கலம், பரமக்குடி வகையறு இடங்களுக்கு பிரிண்டிங், பைண்டிங் ஆர்டர் வாங்கி வருவதற்கு பில்கலெக்டர் போய்வந்த வகையில் ரெயில் சார்ஜ் வகையறு சிலவு 2—4—0 | | | |
| புவனேந்திர காவியவெல நோட்டீஸ் சுதேசமித்திரன் பத்திரிகையில் பிரசுரஞ் செய்ததற்கு முன்மணியார்டர் மூலமனுப்பிய தொகை போக பாக்கி ஸ்டாம்பாக அனுப்பியது சிலவு 0-8-0 | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | சங்கம் சியூட் சம்மந்தமான கோர்ட்டு செலவுக்காக வக்கில் மகா-ா-ா-ஸ்ரீ அமிர்தலிங்கமையர் அவர்களிடம் கொடுத்தது ரூ. ... 15—0—0 | | | |
| | | | | ஆபீஸ் ஸ்டேஷனெரி கண்டிஜன்சிச் செலவு ரூ. ... 3—15—7 | | | |
| | | | | பிரிண்டிங் ஆபீஸ் பில்ப்படி சங்கம் ஆபீசு அச்சுக்கூலி வகைக்குச் செல் ரூ ... 107—3-9 | | | |
| | | | | ஷை ஆபீஸ் பில்ப்படி ஷை ஆபீஸ் பைண்டிங் வகைக்குச் செல் ரூ 21—8—0 | | | |
| | | | | ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ... | 156 | 14 | 8 |
| | | | | ஆகமொத்தம்செலவு | 747 | 15 | 0 |
| ஆக மொத்தம் ரூ | 949 | 14 | 3 | Rs. As. Ps. | | | |
| | | | | *By Pass Book No. 263 of Madura Co-oprative Stores Ltd. } 811-8-2 போகபாக்கியிருப்பு* | 854 | 6 | 1 |
| சென்ற ஜூலைமீ த்தின் கடைசித்தேதியில் நின்ற பாக்கித்தொகை ரூ ... | 652 | 6 | 10 | ஆக மொத்தம் | 1602 | 5 | 1 |
| ஆக மொத்தம் ... | 1602 | 5 | 1 | | | | |
| ஆக மொத்தம் ரூ ... | 1602 | 5 | 1 | By cash with the Manager } 42-13-11 ஆக மொத்தம் | 1602 | 5 | 1 |

T. A. SUBBUVENKATARAMA IYER,
*Manager.*
16—9—12.

*Audited and found Correct*
S. GOPALASAMY IYENGAR,
*Auditor.*
26—9—12.

619

## நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம்

# பூரண ஆரோக்கியம்

என்பது யாதொரு வியாதியுமின்றி வெகுசுத்தமாய் அமைந்திருக்கிறது ஆகையினாலே எப்பொழுதாவது மாறுதல் ஏற்பட்டாலும் அல்லது அற்ப இடையூறுண்டாவதாய் நீங்கள் உணர்ந்தாலும் உடனே தற்கால பலவிருத்தி ஔஷதமாகிய

## ஆதங்க நிக்ரஹ மாத்திரை

களைத் தஞ்சமெனக் கைப்பற்றுங்கள்.

அதி சீக்கிரத்தில் இம்மாத்திரைகள் கொடுக்கக்கூடிய குணம் என்னவெனில், முதலாவது ஜீரணசக்தியை ஒழுங்கு படுத்துகிறது. இதைச் சீர்படுத்தியபொழுது உங்கள் சரீரத்திலுள்ள பாதிப்பிணிகள் நீங்கிவிடுகின்றன. மாத்திரைகளைத் தொடர்ச்சியாய் உபயோகித்துவரின் சீதோஷ்ண வேறுபாடு முதலிய காரணங்களால் உண்டாகும் சகல குழப்பங்களை நீக்குவதுமல்லாமல், பலவித தொத்து வியாதிகளையும் தடுக்கின்றன.

இந்த மாத்திரைகளைச் செய்வதில் கெடுதி விளைவிக்கக்கூடிய எந்த பதார்த்தமும் உபயோகிக்கப்படுவதில்லை. இதன்றி அவைகள் தீங்கற்றவை.

ஒரு டப்பி மாத்திரையை முயற்சித்துப் பாருங்கள். விலை ரூபா ஒன்று தான்.

இன்னும் சவிஸ்தாரமாய் அறியவிரும்பினால் இனாமாய்க் கொடுக்கப்படுகிற எங்கள் **180** பக்கங்கொண்ட புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜி,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
22 பிராட்வே மதிராஸ்.

பல கண்காக்ஷிகளில் மெடல்கள் பெற்ற அபூர்வ ஔஷதங்கள்

620


# மெர்கல்.

## கொடிய மேகரணத்தைத் தீர்க்க உள்ளே சாப்பிடுகிற மருந்து.

40 காப்ஸல்ஸ்களுள்ள பாட்டில்கள்.




மேர்கல் நல்ல ஜீரணசக்தியைக் கொடுக்கக்கூடியது. வயிற்றுவலியையாவது வயிற்று உளச்சலையாவது உண்டாக்கமாட்டாது குண்டிக்காயிலும் எரிச்சல் உண்டாக்கமாட்டாது.

மேர்கலினால் சொஸ்தப்படுத்தப்படும் வியாதிஸ்தர்களுக்கு யாதொரு வலிகளையாவது கெடுதல்களையாவது உண்டுபண்ணுகிற தில்லை. இதில் நிரம்பவும் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால் இந்தமாதிரியாக வைத்தியஞ்செய்வதானது ஒருவனுடைய அவஸ்தையை வெளிப்படுத்தாமல் செய்கிறது.

இது எல்லா ரசாயன மருந்து ஷாப்புக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**HOLZ MULLER & SCHMIDT,**
7, Colootola Street,
**CALCUTTA.**

*Stocked by:—*
T. V. GEORGE & CO.,
*CHEMISTS,*
**MADURA.**

☞ எழுதும் நண்பர்கள் இப்பத்திரிகையிற் கண்டதாக எழுத வேண்டுகிறேன்.

621


# குந்தல கௌமதி.

என்னும் கூந்தலை வளர்க்கும் தைலத்தை இடைவிடாமல் உபயோகிப்பதினால் மயிர்க்கு ஏற்படக்கூடிய தொந்தரவுகள் நீங்கும். இது மயிருடன் சேர்ந்த கபாலத்தோலை ஜிலுஜிலுப்பாகவும், குளிர்ச்சியாகவும் செய்கிறது. மயிர்க்கால்களுக்கு ஊக்கமும் வளரும்சக்தியையும் ஏற்படுத்தி மயிரை மிகவும் நல்ல ஸ்திதியில் வைக்கிறது.

பெரிய அளவு புட்டி 1-க்கு 12-அணா தபால் சார்ஜ் உள்பட ரூ 1- 3-0
ஷை ஷை 3-க்கு ரூ 2 ஷை ஷை ரூ 2-11-0

வேண்டுவோர், சென்னை ஏஜண்டுகளாகிய, எம். ஷாஹீயர்தயால் அண்டு கம்பேனி, 144—5, சினாபெஸார் ரோட்டு, சென்னைக்கு எழுதிக்கொள்ள வேண்டியது.

**Kaviraj. R. C. Sen L. M. S.**

கவிராஜ் ஆர். ஸி. ஸென். எல். எம். எஸ்.

**216 Cornvallis Street,**

காரன்வாலீஸ் தெரு,

**CALCUTTA.**

கல்கத்தா.

# பி. சுப்பராய். ஆயுர்வேத ஔஷதசாலை

## ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள்கோவில் சந்நிதி, தஞ்சாவூர்.

என் ஆயுர்வேத ஔஷதசாலையை பறங்கிப்பேட்டையிலிருந்து ஸ்திரமாக தஞ்சாவூருக்கு மாற்றியாய்விட்டது.

29. **சவன பிரசானம்.**—இம்மருந்தினால் ஈளை, இருமல், சுவாசகாசம், க்ஷயம், தொண்டை ரணம், கபம் இன்னும் நுரை ஈரலைப்பற்றிய எல்லாவித வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் தடையின்றி தீரும். இம்மருந்து பலஈனத்தைப் போக்கி, தேகத்திற்கு வலுவையும், தேஜஸையும், காந்தியையும் தரும். சவனமஹா ரிஷி அவர்களுக்கு இம்மருந்து தேவர்களால் செய்து கொடுக்கப்பட்டு ரிஷி பால்ய திசை யடைந்ததாக ஆயுர்வேத சாஸ்திரத்தில் கொண்டாடப்பட்ட சவன பிரசானம் என்னும் சிறந்த ஔஷதம். டப்பா 1-க்கு ரூபாய்—2. வி. பி. சிலவு அணா—5. பிரத்தியேகம்.

30 **மகரத்துவஜம்.**—இம்மருந்திற்கு ஒப்பான ஔஷதம் ஆயுர்வேதத்தைத் தவிர வேறெந்தவகை மருந்து சாஸ்திரத்திலேயும் கிடையாது. இம்மருந்தினால் தீராத வியாதியாவது குணமடையாத வியாதியாவது கிடையாது. அநேக வியாதிகளுக்கு இது கைகண்ட ஔஷதம். எக்காரணத்தினாலுண்டாகும் தாது நஷ்டம், பலஹீனம், மதுமூத்திரம், அதிமூத்திரம், மூத்திர அடைப்பு, பிரமேகம் முதலிய இன்னும் அநேக மூத்திர நோய்களும், எல்லாவித சுரங்களையும், ஜலுப்பு, இருமல், க்ஷயம், காசம், அஜீர்ணம், நீர்கோர்வை, பாண்டு, சோகை, காமாலை, மயக்கம், சித்த பிரமை, காலரா, பிளேக், ஆண்குறி துவளல், ஸ்திரீகளுக்கு கர்ப்பமாயிருக்கும்பொழுதும், பிரசவித்த பின்பும் காணும் சகல நோய்களையும், நரம்புகளின் பலஹீனம் முதலிய இன்னும் அநேகவித வியாதிகளையும் குணமாக்கும். மூளையைப் பலப்படுத்தும். இம்மருந்து தங்கம் முதலியதுகள் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. விலை தோலா 1-க்கு ரூபா—24. எழு வேளை ஔஷதம் ரூபா—ஒன்று. வி. பி. சிலவு அணா—5. பிரத்தியேகம்.

31. **வசந்த குசுமாகரம்.**—சர்க்கரையோடு கூடியதும், அதாவது மதுமேகம், சர்க்கரையில்லாததுமாகிய நீரிழிவு, பிரமேகம், மூத்திர கிருச்சிரம், தாதுநஷ்டம், பலஹீனம், உடல் வெளுப்பு, இந்திரிய நஷ்டம், அதிதாகம், இருமல், நாக்கு வறண்டுபோகுதல், களைப்பு, மயக்கம், அசக்தி, கை கால்கள் எரிச்சல் முதலிய அநேக வியாதிகள் சீக்கிரம் அடியோடு குணமாகும். மிகவும் விலையுயர்ந்த ஔஷதம். இது செய்வதில் முத்து, தங்கம், கஸ்தூரி, முதலிய இன்னும் விலைபெற்ற சாமான்கள் சேருகின்றன. எழு வேளை ஔஷதம் விலை ரூபா—5. வி. பி. சிலவு அணா—5 பிரத்தியேகம்.

623

No. 3.

# CHILDREN IN INDIA,

have much to contend with, owing to the enervating climate.

Early in life they need a tonic and reconstructive to aid in developing their little bones and muscles.

## SCOTT's EMULSION

contains the proper bone and tissue builder for children.

*IT IS IDEAL.*

The results are noticeable shortly after taking.




NOT TOUCHED BY HAND

*FOR SALE AT ALL CHEMISTS.*

SCOTT & BOWNE, LTD.

MANUFACTURING


CHEMISTS

LONDON, ENGLAND

(No. 1.)

# CHAMBERLAIN'S PAIN BALM

## உடம்பில் நோய்க்குச் சேம்பர்லேன் துரை செய்திருக்கு தைலம்.




முதுகுபிடிப்பு, பக்கசூலை, கைகால்

ஓய்ச்சல், தலைநோய், காயங்கள்,

இவைகளைத் தீர்க்கும்.

கீல்வாயுவையும், தீர்க்கும், தீர்க்கும், தீர்க்கும்.

## கீல்வாய்வு என்றால் என்ன?

கீலுக்குக்கீல் வீக்கமும் வேதனையும், குத்தலும் குடைச்சலும் இழுப்பும் வலிப்பும். உட்காரமுடியாது, உறங்கமுடியாது.

இப்படியெல்லாம் இருந்தால், கீல்வாயுவுதான் என்று கொள்ளும்; தப்ப, சேம்பர்லேன் தைலத்தை வாங்கிக்கொள்ளும்.

நோவும் வீக்கமுமிருக்குமிடத்தில் தைலத்தைத் தேய்த்தவுடனே உள் எலும்புவரைக்கும் மருந்திறங்குவதை உணர்வீர். உடனே வேதனை குறையும். தைலத்தைத் தேய்த்துவர நாளடைவில் நோய் அடியோடு நீங்கும்.

இது முழுவதும் மூலிகை. கைபடாமல் செய்தது.

எங்கும் விற்பது, எளிதில் கிடைப்பது.

சின்னபுட்டி ரூபா. 1. —— பெரிய புட்டி ரூபா. 2.